Registered as a Newspaper  பக்கங்கள் 10  விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 05  திருவள்ளுவர் ஆண்டு 2025  மாசி 13  25.02.94  வெள்ளிக்கிழமை  ஓசை 07

## உயர்தர வகுப்பு மாணவர் கல்லூரி வருகை வீழ்ச்சி

பாடசாலைகளின் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவு குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது, யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டங்களிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு நேற்றுத் திடீர் விஜயம் மேற்கொண்ட கல்வி அதிகாரிகள் மாணவர் வரவுக் குறைவைக் கண்டுபிடித்துள்ளனர். 1994இல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள (10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை ஊக்குவிக்க தலைவர் நல்லெண்ண சமிக்கை

## இரு போர்க்கைதிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

**சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் நல்லெண்ண முயற்சியாக சிங்களப் போர்க் கைதிகள் இருவரை தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுதலை செய்துள்ளார். கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டதற்கு இணங்க மனிதாபிமான அடிப்படையில் இப் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.**

இவ் விடுதலை குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைவர் பிரபாகரனிடம் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ சமாதானத்தை ஊக்குவிக்கும் நோக்கில் யுத்தக் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு விடுத்த வேண்டுகோளின் பேரில் இரு யுத்தக் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.


நேற்றுமாலை மூன்று மணியளவில் இவ் இரு கைதிகளும் விடுதலை செய்யப்பட்டு அகில இலங்கை கத்தோலிக்க துறவிகள் சங்கத் தலைவர் அல்பிறெட் அலெக்ஸ்சாண்டரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மாங்குளம் பொலிஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த போது யுத்தக் கைதியாக பிடிக்கப்பட்ட தெல்தெனியவைச் சேர்ந்த திலகரட்ண பண்டார (வயது 39) என்பவரும் ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தபோது யுத்தக் கைதியாக பிடிக்கப்பட்ட தம்புள்ளவைச் சேர்ந்த சந்திரசேகரா (வயது 36) என்பவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

மேற்படி இருவரது விடுதலை தொடர்பான பத்திரத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. தங்கன் கையொப்பமிட்டார்.

இதன்போது விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் வணபிதா கலாநிதி சந்திரகாந் அவர்களும் அகில இலங்கை துறவிகள் சங்கத் தலைவர் அல்பிறெட் அலெக்ஸாண்டர் அவர்களும் உடனிருந்தனர்.

இவ்விரு யுத்தக் கைதிகளும் திருமணமானவர்கள் என்ற அடிப்படையிலேயே தேசியத் (10ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நடைபெற்ற யுத்தக் கைதிகள் விடுவிப்பு நிகழ்வின்போது அரசியற்துறையைச் சேர்ந்த திரு. தங்கன், கத்தோலிக்க துறவறச்சங்கத் தலைவர் அல்பிறெட் அலெக்ஸாண்டர் மற்றும் விடுவிக்கப்பட்ட இரு போர்க் கைதிகளையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

## புலிகளின் நல்லெண்ணத்தினால் இன்று விடுதலையாகிறோம்

### விடுவிக்கப்பட்ட யுத்தக்கைதிகள் தெரிவிப்பு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளின் நல்லெண்ண அடிப்படையிலும் அதன் தலைவர் வே. பிரபாகரனின் மனிதாபிமான அடிப்படையிலுமே நாம் இன்று விடுதலை யாகிறோம் என்பது எமக்கு நன்கு தெரியும். எமக்கு முன்னர் விடுதலையான பத்துப் பேரும் இவ்வாறான வகையிலேயே விடுதலையானார்கள். அரசு எமது விடுதலை தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்ளாதது பெரும் வேதனை தருகிறது என நேற்று விடுதலையான யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

எமது விடுதலைக்கு வாய்ப்பளித்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

நாம் சுமார் 45 மாதங்கள் வரை யுத்தக் கைதிகளாக இருந்தோம். அக்காலப் பகுதியில் உணவு, உடை சுகாதார மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கி விடுதலைப் புலிகள் நன்கு பராமரித்தார்கள். இதைவிட நாம் (10ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயந்த கொத்தலாவல ராணுவத்திலிருந்து நீக்கம்

லெப்டினன்ட் கேணல் ஜெயந்த கொத்தலாவல இராணுவ சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்காவின் பணிப்பின்பேரில் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இவர் அமெரிக்காவில் இராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது திருட்டுச் சம்பவத்துடன் இவரை தொடர்புபடுத்தி செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

## வாக்காளர் அட்டை தபாலகத்தில் அபகரிப்பு

(கொழும்பு)

வவுனியா நகரசபை உள்ளூராட்சித் தேர்தல் வாக்காளர் அட்டைகள் இனம் தெரியா நபர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை உள்ளூராட்சித் தேர்தலில் 12,604 வாக்காளர் வாக்களிக்க இருப்பதாகவும் இதில் சுமார் 3,600 வாக்காளர் அட்டைகள் தபால் அலுவலகத்தில் வைத்து அபகரிக்கப்பட்டதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் கடத்தப்பட்டவர் கொழும்பில் மீட்பு

கிழக்கு மாகாணத்தில் கடத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் மூவர் கொழும்பு றெம்பானா அலுவலகத்தில் இருந்து சிறிலங்கா விசேட பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை இவரது கடத்தல் தொடர்பாக கிழக்கு மாகாண றெம்பானா நிறு (10ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

வெளிவாரிப் பட்டப் படிப்பு, பேராதனை பல்கலைக்கழக கலைப்பிரிவு இறுதிப் பரீட்சை முடிவுகள் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

## கடற் தடைச்சட்டம் நீக்கம் விபரம் கோருகிறார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் பிறப்பிக்கப்பட்ட வடபகுதிக் கடற்கரையோரம் மீதான தடைச் சட்டம் நீக்கப்படுவது தொடர்பாக மேலதிக விபரங்களை யாழ். அரச அதிபர் சிறிலங்கா அரசிடம் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று சிறிலங்கா அரசிற்கு அவசர வானொலிச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி தடைச் சட்டம் பற்றிய பூரண விபரம் தெரியாமல் மீனவர் கடலில் நடமாடும் வேளையில் ஏற்படக் கூடிய அபாயங்களை தவிர்க்கும் முகமாக தாம் இந்நடவடிக்கையை எடுத்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (யா)

# வெளிவாரிப் பட்டப்படிப்பு, பேராதனை கலைப் பிரிவு இறுதியாண்டு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பு, கலைப்பிரிவு இறுதி ஆண்டு பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன- இப்பரீட்சையில் சித்தியடைந்தோரின் சுட்டிலக்கங்கள் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 311 | 318 | 319 | 326 | 327 | 328 |
| 406 | 407 | 408 | 462 | 464 | 468 |
| 479 | 480 | 595 | 600 | 603 | 701 |
| 702 | 703 | 725 | 726 | 745 | 746 |
| 758 | 789 | 790 | 3001 | 3002 | 3003 |
| 3006 | 3007 | 3008 | 3011 | 3013 | 3014 |
| 3015 | 3019 | 3024 | 3028 | 3030 | 3031 |
| 3033 | 3034 | 3039 | 3041 | 3044 | 3046 |
| 3051 | 3053 | 3054 | 3055 | 3056 | 3058 |
| 3060 | 3061 | 3063 | 3064 | 3066 | 3068 |
| 3070 | 3073 | 3077 | 3078 | 3080 | 3081 |
| 3084 | 3085 | 3086 | 3089 | 3092 | 3094 |
| 3097 | 3098 | 3101 | 3106 | 3109 | 3110 |
| 3113 | 3114 | 3117 | 3122 | 3123 | 3129 |
| 3130 | 3135 | 3136 | 3138 | 3139 | 3147 |
| 3149 | 3153 | 3159 | 3163 | 3164 | 3166 |
| 3167 | 3168 | 3171 | 3175 | 3178 | 3179 |
| 3181 | 3183 | 3186 | 3187 | 3188 | 3189 |
| 3192 | 3199 | 3202 | 3203 | 3205 | 3208 |
| 3211 | 3214 | | | | |
| 3218 | 3224 | 3226 | 3227 | 3230 | 3231 |
| 3234 | 3237 | 3238 | 3240 | 3242 | 3244 |
| 3245 | 3246 | 3248 | 3249 | 3250 | 3252 |
| 3253 | 3255 | 3257 | 3258 | 3261 | 3262 |
| 3264 | 3265 | 3270 | 3271 | 3279 | 3282 |
| 3290 | 3291 | 3295 | 3296 | 3297 | 3301 |
| 3305 | 3306 | 3309 | 3310 | 3312 | 3314 |
| 3324 | 3327 | 3331 | 3333 | 3334 | 3335 |
| 3336 | 3337 | 3340 | 3341 | 3343 | 3345 |
| 3346 | 3350 | 3351 | 3353 | 3355 | 3360 |
| 3361 | 3364 | 3369 | 3371 | 3375 | 3376 |
| | 3380 | 3383 | 3386 | 3387 | 3389 |
| 3391 | | 3393 | 3394 | 3395 | 3397 |
| 3399 | 3401 | 3402 | 3404 | 3408 | 3411 |
| 3412 | 3417 | 3418 | 3420 | 3421 | 3423 |
| 3424 | 3426 | 3427 | 3428 | 3429 | 3435 |
| 3436 | 3437 | 3438 | 3444 | 3447 | 3450 |
| 3454 | 3456 | 3458 | 3459 | 3460 | 3461 |
| 3462 | 3463 | 3464 | 3465 | 3471 | 3472 |
| 3474 | 3475 | 3476 | 3477 | 3478 | 3483 |
| 3486 | 3488 | 3489 | 3495 | 3498 | 3499 |
| 3500 | 3501 | 3503 | 3504 | 3507 | 3512 |
| 3514 | 3518 | 3519 | 3524 | 3534 | 3535 |
| 3541 | 3548 | 3549 | 3556 | 3557 | 3559 |
| 3564 | 3566 | 3567 | 3571 | 3572 | 3574 |
| 3575 | 3577 | 3578 | 3580 | 3582 | 3584 |
| 3586 | 3590 | 3592 | 3593 | 3594 | 3595 |
| 3596 | 3599 | 3601 | 3604 | 3605 | 3606 |
| 3607 | 3608 | 3611 | 3614 | 3618 | 3623 |
| 3629 | 3630 | 3632 | 3633 | 3639 | 3640 |
| 3643 | 3645 | 3649 | 3650 | 3652 | 3655 |
| 3657 | 3658 | 3661 | 3664 | 3665 | 3666 |
| 3669 | 3670 | 3673 | 3674 | 3675 | 3676 |
| 3678 | 3680 | 3685 | 3686 | 3687 | 3688 |
| 3690 | 3691 | 3692 | 3693 | 3694 | 3696 |
| 3702 | 3703 | 3707 | 3709 | 3710 | 3711 |
| 3712 | 3717 | 3721 | 3722 | 3723 | 3724 |
| 3725 | 3726 | 3727 | 3728 | 3730 | 3731 |
| 3732 | 3735 | 3736 | 3743 | 3747 | 3750 |
| 3753 | 3754 | 3755 | 3756 | 3758 | 3763 |
| 3767 | 3769 | 3771 | 3772 | 3774 | 3775 |
| 3779 | 3780 | 3785 | 3786 | 3787 | 3790 |
| 3791 | 3792 | 3795 | 3800 | 3801 | 3806 |
| 3807 | 3810 | 3811 | 3814 | 3817 | 3818 |
| 3824 | 3825 | 3830 | 3831 | 3832 | 3833 |
| 3834 | 3838 | 3848 | 3853 | 3854 | 3855 |
| 3857 | 3863 | 3866 | 3868 | 3869 | 3870 |
| 3875 | 3876 | 3877 | 3880 | 3881 | 3883 |
| 3885 | 3888 | 3895 | 3898 | | |
| 4400 | 4421 | 4430 | 4432 | 4442 | 4546 |
| 4447 | 4455 | 4457 | 4469 | 4476 | 4477 |
| 4478 | 4484 | 4503 | 4509 | 4510 | 4516 |
| 4518 | 4519 | 4521 | 4523 | 4525 | 4526 |
| 4528 | 4529 | 4535 | 4537 | 4538 | 4540 |
| 4542 | 4543 | 4544 | 4546 | 4547 | 4549 |
| 4552 | 4557 | 4560 | 4561 | 4562 | 4568 |
| 4571 | 4575 | 4577 | 4579 | 4582 | 4584 |
| 4587 | 4592 | 4593 | 4594 | 4600 | 4601 |
| 4602 | 4603 | 4609 | 4611 | 4613 | 4614 |
| 4617 | 4619 | 4622 | 4623 | 4625 | 4628 |
| 4629 | 4633 | 4634 | 4640 | 4653 | 4655 |
| 4656 | 4657 | 4665 | 4666 | 4673 | 4674 |
| 4676 | 4679 | 4683 | 4692 | 4694 | 4695 |
| 4696 | 4700 | 4702 | 4704 | 4707 | 4713 |
| 4714 | 4716 | 4717 | 4720 | 4721 | 4722 |
| 4724 | 4726 | 4727 | 4729 | 4730 | 4733 |
| 4734 | 4737 | 4739 | 4742 | 4744 | 4746 |
| 4747 | 4750 | 4754 | 4755 | 4776 | 4778 |
| 4779 | 4780 | 4784 | 4786 | 4796 | 4798 |
| 4756 | 4758 | 4759 | 4802 | 4805 | 4808 |
| 4811 | 4819 | 4822 | 4824 | 4830 | 4832 |
| 4835 | 4837 | 4838 | 4840 | 4841 | 4844 |
| 4845 | 4849 | 4852 | 4854 | 4857 | 4861 |
| 4864 | 4872 | 4876 | 4878 | 4881 | 4883 |
| 4885 | 4887 | 4889 | 4891 | 4892 | 4896 |
| 4899 | 4902 | 4903 | 4908 | 4909 | 4911 |
| 5915 | 4916 | 4917 | 4919 | 4922 | 4924 |
| 4927 | 4928 | 4929 | 4930 | 4932 | 4934 |
| 4936 | 4938 | 4939 | 4941 | 4942 | 4944 |
| 4946 | 4947 | 4952 | 4955 | 4959 | 4960 |
| 4961 | 4964 | 4569 | 4971 | 4976 | 4995 |
| 4996 | 5033 | 5036 | 5048 | 5057 | 5059 |
| 5093 | 5099 | 5112 | 5117 | 5119 | 5124 |
| 5143 | 5150 | 5151 | 5157 | 5163 | 5167 |
| 5173 | 5174 | 5175 | 5185 | 5187 | 5189 |
| 5216 | 5217 | 5222 | 5228 | 5229 | 5238 |
| 5241 | 5243 | 5283 | 5295 | 4765 | (நி) |


## வரி விளம்பரம்

### சனிமாற்றம் (31-5-95 வரையும்)

1-3-94 முதல் 2-7-94வரை வியாழ வக்கிரமும் ரூ. 10/- எங்கும் கிடைக்கும். J. கிருஷ்ணமூர்த்தியின் அகமலர்ச்சி, சீரடிபாபாவின்அதிசயங்களும் அற்புதங்களும்: சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof. சத்தியதாஸன், கட்டுடை. (7596)

### சக்திஇயற்கைப்பசளை

"சக்தி"யை விஞ்சிய இயற்கைப் பசளை வேறு ஏதுமில்லை. சக்திமிக்க பசளை வகைகள் அத்தனையும் முறைப்படி கலந்து உற்பத்தி செய்யப்பட்ட கூட்டெரு "சக்தி" வீட்டுத்தோட்டம், மற்றும் பயிர்ச்செய்கைக்கு "சக்தி" பக்கற் ஒன்று விலை ரூ. 7/- 10 கிலோ ரூ. 120/- 20 கிலோ ரூ. 200/-. "மில்க் வைற்" (சி-8705)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும், உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு. கஜன்ஸ் வாச் வேக்ஸ், இல: 12 ஸ்ரேசன் வீதி, சந்திக்கருகாமையில் சுன்னாகம். (7601)

### தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருள்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வளம் இல. 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒருகிழமை வளர்ச்சியடைந்த கைலைன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7599)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல: 288, நாவலர் வீதி, (யாழ். தனியார்வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7547)

### வியாபாரிகட்கு

அழகுசாதனப் பொருட்கள், லேஸ், நூல், கோல்ட் கவறிங் நகைகள், எவர்சில்வர் பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை, 177A மின்சாரவீதி, யாழ்ப்பாணம். (சி-8709)

### யோகாசன கருத்தரங்கு

அகில இலங்கை சர்வமத யோகாசன அமைப்பின் மாதாந்த யோகாசன கருத்தரங்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிறு மாலை 3.30 மணிக்கு இடம் பெறும்.

### பௌர்ணமிக் கலைவிழா

(குருநகர்)

நவாலி தெற்கு, இப்திரான் முருகானந்தா சனசமூக நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணிக்கு பௌர்ணமிக் கலை விழா நடைபெறும். (21)



யாழ்.
மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம்
கலை வளர்வுக்காக நடாத்தும்
மாபெரும்

## "கோலக் கண்காட்சி" திறப்பு விழா

அத்துடன் கண்கவர் கைப்பணிப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியும் நடைபெறும்.

பிரதம விருந்தினர்:
**திரு. கா. மாணிக்கவாசகர்**
(அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:
**திருமதி எஸ். ஜெயராஜ்**
(அதிபர் யாழ். இந்துமகளிர் கல்லூரி)
**திரு. சேரலாதன்**
(துணைப் பொறுப்பாளர் கலை பண்பாட்டு கழகம்)

இடம்: யா / இந்து மகளிர் கல்லூரி
காலம்: 25 - 02 - 1994
நேரம்: காலை 11 - 30 மணி
தொடர்ந்து 25-2-94 மாலை 2-00 — 5-00 வரை. 26-ம் 27-ம் திகதிகளில் காலை 9-00— 5-00 வரையும் கண்காட்சி நடைபெறும்.

அன்பளிப்பு: 10/- மட்டும்

விளம்பர அன்பளிப்பு:
**ஜெயச்சித்ரா நகை மாளிகை**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
177 D கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(7609)



## நினைவு கூருகின்றோம்..
## 1994. 02. 25

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த-

**துமிலன்** (சின்னத்தம்பி விஜயகுமார் - அரசினர் பண்ணை, கரடியனாறு - மட்டு)

1987ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கந்தையா-செல்வம்** (கிருஷ்ணபிள்ளை வரதராசா - தண்டுவான், நெடுங்கேணி - மணலாறு)

1989ஆம் ஆண்டு வவுனியா - கோயில்குளம், கல்வீரன் குளம், ஆதிகுளம், சிதம்பரபுரம் சவயமலைப் பகுதிகளில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழிளைஞர்கள்

1991ஆம் ஆண்டு மட்டு-ஏறாவூர்ப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற்படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**லெப். விகடன்** (—யோகராசா-ஏறாவூர் 05மட்டு)

வவுனியாவில் எதிர்பாராத விதமாக இராணுவ எல்லைக்குள் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**மேஜர் செங்கதிர்** (நடேசு ரஞ்சிதவரதராசா- இடைக்குறிச்சி, கரவெட்டி வடக்கு - யாழ்)

**சிந்து** (ரகுநாதன் சரவணபவன்-சங்குவேலி உடுவில் யாழ்)

1992ஆம் ஆண்டு பூநகரியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவமுகாம்களுக்குப் பாதுகாப்பாக சித்தக்குறிச்சிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள்மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**லெப். காந்-மதுரம்** (வேலாப்போடி உதயகுமார்) ஏறாவூர் - மட்டு)

யாழ்- வீமன்காமம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**லெப். சுரேஸ்** (சின்னத்துரை தயாபரன் - 4-ம்வட்டாரம் மண்டைதீவு - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8694)

# ஆசியப் புவிசார் அரசியலில் அதிர்ச்சியூட்டும் திருப்பங்கள்

"முன்பெல்லாம் கென்றி கிஸிங்கர் போன்றோர் காலத்தில் அரசியல் பாதுகாப்புத் துறை என்றால் அவை அரசியல் சிந்தனையாளர், ஆய்வாளர் குழுக்களோடு கலந்தாலோசிப்பதாகவே அமையும். இப்போதோ இவைகள் பற்றி காலையில் 'ஆசியா வோச், சருவதேச மன்னிப்புச்சபை போன்ற மனித உரிமை காப்பு அமைப்புக்களோடும் மாலையில் வணிக நிறுவனங்களின் அவையோடும் பேச்சுவார்த்தைகள் நடாத்துகிறோம். காலம் என்னமாய் மாறிவிட்டது" என்கிறார் அமெரிக்க வெளிநாட்டமைச்சின் குழுக்களின் பசுபிக் பிராந்திய செயலர் ஒருவர். இவரின் இக்கூற்றானது இன்று ஆசிய புவிசார் அரசியலில் ஏற்பட்டுவரும் தலைகீழ் மாற்றங்களைக் குறிப்பதாக நாம் கொள்ளமுடியும்.

புதிய உலக ஒழுங்கில் புதிய ஆசிய ஒழுங்கு ஒன்றை தோற்றுவிக்க அண்மைக்காலமாக எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள்மிகச்சுவையானவை அமெரிக்கா, யப்பான், சீனா என விரியும் இந்நாடுகளின் செயல்பாடுகளும் பின்னணிகளும் பல செய்திகளை எமக்கு முன்னே அரங்கேற்றுகின்றன முன்பு 1970களின்பின் சோவியத்திற்கு எதிராக ஒரு தடுப்பாக சீனாவை அமெரிக்கா துருப்புச்சீட்டாக பயன்படுத்தியகாலமொன்றிருந்தது ஆனால் இன்று அமெரிக்காவையே சீனா தனது நலன்களுக்காக துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தும் நிலை தோன்றியிருப்பது இத்தகையஒரு சுவையானதிருப்பமாகும் 20 வருடங்கட்கு முன் ஒரு அமெரிக்கத் தொழிலாளியாவது சீனாவை நம்பியிருக்கவில்லை. ஆனால் இன்று இரண்டு இலட்சம் அமெரிக்கர்கள் சீனாவுக்கு ஏற்றுமதியாகும்ஒன்பது (9)பில்லியன் டொலர் பெறுமதியான பண்டத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். அமெரிக்க விமான நிறுவனமான போயிங்கோ தனது 14 சதவீதத்திற்குகூடுதலானவிற்பனைக்கு சீனாவையே நம்பியுள்ளதாம். அது மட்டுமன்றி சீனாவிலிருந்து இறக்குமதியாகும் மிகக் குறைந்த விலைக்கு கிடைக்கக்கூடிய துணிமணிகளை உடுபுடவைகளை நம்பி பல இலட்சக்கணக்கான அமெரிக்க குடும்பங்கள் இன்றுள்ளன. இது இப்போதைய புதிய தொடர்கின்ற கதை

ஆனால் ஒரு சில பத்தாண்டுகட்கு முன் நிலைமை எவ்வாறிருந்தது? வல்லரசுப் போட்டாபோட்டி நிலவிய பனிப்போர்க் காலத்தில் செஞ்சீனா பெரும் பூதம் என்றும் அழிவின் மையம் எனக்கூறி அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் வலதுசாரி இராணுவ சர்வாதிகார அரசுகளை அமெரிக்கா தோற்றுவிக்கவில்லையா? தென்கொரியா, தென்வியட்நாம் இத்தகைய அமெரிக்காவின் தத்துப் பிள்ளைகள் ஆகும். இவைக்கு மட்டுமன்றி ஏனைய தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், தைவான் போன்ற நாடுகட்கும் பெருமளவில் இராணுவ, பொருண்மிய உதவிகளை செய்து தனது மூலதனத்தின் கணிசமான பகுதியை இப்பகுதிக்குள் நகர்த்தி இந்நாடுகளில் வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஒரு செயற்கையான வளர்ச்சியை அமெரிக்கா உருவாக்கியது. இவற்றின் பயனாக 1980களில் தென்கொரியா, தைவான், கொங்கொங், சிங்கப்பூர் போன்றவை "நான்கு பொருண்மியப் புலிகள்" என்ற நிலைக்கு உயர்ந்ததும் ஏனைய ஆசிய நாடுகள் அவற்றினைப் பார்த்து வாயைப் பிளந்ததும் தெரிந்த செய்திகள்.

ஆயினும் 1975களின் பின்னர்-தனது வியட்நாம் போர் தோல்வியுற்றபின் - சோவியத்தின் அணுவாயுத வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் - விரைவில் கலாசாரப் புரட்சி முடிந்தபின் தோன்றிய சூழல்களை பயன்படுத்திய அமெரிக்கா கதையை மாற்றியது. படிப்படியாக வளர்ந்த சீன அமெரிக்க பொருண்மிய உறவுகள், இன்று தவிர்க்க முடியாத ஒரு உச்ச நிலையை அடைந்து கொண்டிருக்கின்றன, இவற்றின் ஒரு பிரதிபலிப்பாகத்தான் மிக அண்மையில் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அணுக்குண்டுச் சத்தம் தொடர்பாக சீனா தலையிட்டு நடுவராக நின்று தீர்த்து வைக்கக்கூடிய தகுதியைப் பெற்றது. வடகொரிய - அமெரிக்க மோதல் அல்லது வட, தென்கொரிய மோதல்கள் தனக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்றுணர்ந்த சீனா தனது பேரம் பேசும் ஆற்றலைப் பயன்படுத்தி இரு தரப்பையுமே இறங்கி வரச் செய்தது. வடகொரியாவோடான தனது 1400 கிலோ மீற்றர் எல்லையும், கொரியத் தீபகற்பமும் உறுதிப்பாடாக இருந்தாலே யப்பானின் போட்டிக்கு ஈடுகொடுக்க சீனாவால் முடியும். ஏனென்றால் தன் வழியில் நடைபோகும் வடகொரியாவையும் அதேசமயம் தனது தென்கொரியாவோடான பொருண்மியதொடர்புகளையும்காப்பாற்ற இப்போது சீனாவால் முடிகின்றது. இங்கே அமெரிக்கா சீனா சொல்வதையே கேட்டுச் செயல்பட்டது. இன்னொரு சுவையான காட்சி அல்லவா? இப்போது வடகொரியா தனது அணுஆலைகளை சருவதேச கண்காணிப்பிற்கு உட்படுத்த சம்மதித்துவிட்டது, சீனாவின் நிலையை மேலும் உயர்த்திவிட்டது.

---

## பாலகுமாரன்

---

இது ஆசிய அரசியலில் சீனாபற்றிய கதை. யப்பானின் வரலாறும் இதற்குக் குறைந்தது அல்ல. இப்போது யப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அண்மைக்கால தகராறுகள் மிக வெளிப்படையாக தெரியத் தொடங்குகின்றன. புதிய பொருண்மியப் போரொன்றை அமெரிக்கா இப்போது யப்பானுக்கு எதிராக தொடங்கியிருப்பதாக கூறப்படுகின்றது. தனது வழிக்குவராவிட்டால் பொருளாதாரத்தடைவிதிக்கப்படும் என பேச்சளவில் எச்சரிக்கும் நிலைக்கு பில் கிளின்டன் சென்றுவிட்டார். யப்பானின் பெருவளர்ச்சி. அமெரிக்காவோடான அதன் வணிக மிகை அமெரிக்காவிற்கும் அதன் சரியும் பொருண்மியத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக மெல்ல மெல்ல மாறும் நிலையில் வெளிப்பாடுகளே இவை.

ஆனால் யப்பானின் இத்தகைய வளர்ச்சி நிலைக்கு அமெரிக்காவே பிரதான காரணம் என்கிறது வரலாறு. பின் நோக்கி யப்பான் வரலாற்றினைக் பார்த்தாலே இது புரியும். யப்பான் இன்று பெரும்வளர்ச்சி பெற்ற, கடின உழைப்புக் கொண்ட தேசம் என பலராலும் பாராட்டப்படுகின்றது. ஆனால் இதன் உண்மைக் கதை என்ன? 1895-ம் ஆண்டிலே தைவானை அடிமைப்படுத்தி, 1910 கொரியாவை கைப்பற்றி, 1931ஆம் ஆண்டிலே சீனாமேல் பெரும்படையெடுப்பை நடாத்தி, இரண்டாம் உலகப் போரின் போது பல பசிபிக் தீவுகளை, தென்கிழக்காசிய நாடுகளை தன் வசமாக்கிய யப்பான் செய்த கொடுமைகள் ஏராளம் இப்போதைய தகவலின்படி 30 மிலியன் மக்களை யப்பானிய இராணுவம் மொத்தமாகக் கொன்றது; 2 இலட்சத்திற்கு மேற்பட்டதைவான், கொரியா, சீன, பிலிப்பைன்ஸ்பெண்களைதனது இராணுவத்திற்கென "வசதிப்பெண்டிர்" (Comfort Women) ஆக்கியது; 2 இலட்சம் கொரியர்களை 40,000சீனர்களை தனது நாட்டிற்கு கப்பலிலேற்றி அனுப்பி தொழிலாளர்களாக வாட்டி வதைத்தது இத்தனையும் செய்த யப்பானுக்கு - தானே அணுக்குண்டைப் போட்டு அடக்கிய யப்பானுக்கு-பின் அமெரிக்கா என்னமாய் உதவி செய்தது என்பதுதான் எமக்கு தேவையான வரலாறு.

இரண்டாம் உலகப் போரின் பின் மூலைக்குள் முடங்கியிருந்த யப்பானை கைதூக்கி வேண்டிய உதவிகளை செய்து பனிப்போர் நிலவிய காலகட்டம் முழுவதும் ஆசிய, பசிபிக் பிராந்தியத்தில் சீன, சோவியத் ஆதிக்கத்திற்கு எதிரான தனது மிக உறுதியான நெருங்கிய நிரந்தர இராணுவ பொருண்மிய அரசியல் பங்காளியாக அமெரிக்கா ஆக்கியது, இச் சூழலை தக்க முறையில் பயன்படுத்தியே யப்பான் வளர்ந்தது பனிப்போர் காலகட்டத்தில் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்கா பொது உடமை அபாயத்திற்குஎதிராகபோராடும் சனநாயகநாடுகட்கு உதவுவதாக கூறிநடாத்தியஇருபோர்களால் (கொரியப்போர் (1950-1953) வியட்நாம் போர் (1965-1975) யப்பான் கூடுதலாகப் பயனிபெற்றது. இன்று பிரபலமாகவுள்ள யப்பானின் ரொயோட்டா (Toyota) நிறுவனம் தனது வளர்நிலையை கொரியப்போரின் போது அமெரிக்கப்படைகட்கு இராணுவ ட்ரக் வண்டிகள் தயாரித்தே பெற்றது ஒரு உதாரணமாகும். இவ்வாறாக யப்பான் 1960 அளவில் பெரும் பொருண்மிய சக்தியாகியது.

முன்னர் போர் மூலம் செய்யமுடியாததை இப்போது மிக நுட்பமான பொருண்மிய செயற்பாடு ஒனறின்மூலம் யப்பான் சாதித்தது அமெரிக்க முதலீட்டைப் பெற்ற கிழக்காசிய நாடுகள் பலவற்றில் அவற்றின் கைத்தொழில் மயமாக்கலுக்கு அவசியமான உட்கட்டுமானப் பணிகளை யப்பானே மேற்கொண்டது. முதலிட்டது. அதுமட்டுமன்றி தனது பொருண்மிய விரிவாக்கத்திற்கு ஏற்ற வகையில் ஆசியநாடுகளின் பொருண்மிய சூழல்களை மாற்றவும் தனது போர்க்கால குற்றங்களை மறைக்கவும் வசதியாக ODA (Overseas Development Assistance) கடல் கடந்த நாடுகட்கான உதவித்திட்டம்ஒன்றை உருவாக்கியது தான் மூலப்பொருட்களைப் பெறும் ஆசியநாடுகட்கே60-70சதவீதம்வரை இத்திட்டத்தின் பெரும் பகுதியை வழங்கியது. இங்கேதான் யப்பானியர் மூளைத்திறன் வேலைசெய்தது உதவித்திட்டங்கள் ஆசிய நாடுகளின் உட்கட்டுமானப் பணிகளான வீதிகள், பாலங்கள், விமான நிலையங்கள், மின்னுற்பத்தி நிலையங்கள், தொடர்பு சாதன அமைப்புக்கள் போன்றவற்றிற்கே அளிக்கப்பட்டன. இவையெல்லாம் மறைமுகமாக யப்பானிய நிறுவனங்களின் உதவியை அவற்றின் ஆற்றலை பயன்படுத்தவுமே வழி வகுத்தன அவ் வகையில் இந்நிதிஉதவித் திட்டங்கள் இறுதியாய் யப்பானின் பெரும் வணிக நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கே வழிவகுத்தன. இதன் பயனாக இன்று ஆசியா, யப்பானின் மூலப் பொருள் வினியோகத்தராக முடிவுப் பொருட்கள் விற்கும் சந்தையாக, தொழில்சாலையாக சுருக்கின் யப்பானின் துணைக்கொந்தராத்துக்காரனாக (Sub-Contrator) மாறிவிட்டது. இத்தகைய-நிலையை இன்று யப்பானின் இரண்டாவது வருகையாக (Second Coming) ஆய்வாளர்கள் வருணிக்கின்றார்கள்.

ஆனால் இப்போதைய புதிய ஒழுங்கு என்ன? 1989ஆம் ஆண்டு பேர்ளின் சுவர் தரைமட்டமாக, 1991ஆம் ஆண்டு சோவியத் அணியில் முடிகவிழ எவரும் எதிர்பார்க்கா வகையில் கிழக்கும் மேற்கும் சந்தித்தன. ஆப்கானிலிருந்து வியட்நாமிலிருந்துரஷ்யப் படைகள் சொல்லாமல் கொள்ளாமல் திரும்பின. பிலிப்பைன்சில் அமெரிக்காவோ எரிமலைக் குழம்பைகாரணங்காட்டி பின்வாங்கியது. அமெரிக்கா அரசியலில் ஒற்றை முனை மேலாண்மை பெற்றது. முதலாளிய உலகம் யப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என முப்பிரிவாகி ஓயாது தமக்குள் மோதியும் ஒட்டுமொத்தமான நலன்களைப் பாதுகாக்க ஒன்று சேர்ந்தும் புதுவகை குத்துக்கரணங்கள் இப்போது அடிக்கின்றன. அமெரிக்காவில் மிகப் பாரிய பல்தேச வர்த்தக நிறுவனங்களான ஜெனரல் மோட்டோர்ஸ், IBM போன்றவை அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை சீனா, வியட்நாமில் தாம் முதலிட அவற்றின் பரந்த சந்தையை, அளவிட முடியாவளங்களைப் பயன்படுத்தத் தக்கவாறு அமைக்குமாறு நிர்ப்பந்திக்கின்றன. பலன் பத்தாண்டுப் போரில் 5 இலட்சம் துருப்புக்களை அனுப்பி B52 போர் விமானங்களால் ஓயாது குண்டுவீசி அழித்த முன்னாள் 'கம்யூனிசப்பிசாசு' எனப்பட்ட வியட்நாமோடு இப்போது நெருங்கிய உறவினை கிளின்டன் ஏற்படுத்துகிறார். அமெரிக்க நிறுவனங்களோ அடுத்த 5 ஆண்டுக்குள் 8 பிலியன் டொலரை வியட்நாமில் முதலிட தீர்மானம் எடுத்துவிட்டன. இவ்வாறாக புதுசமநிலை, புது அரசியல் வாய்ப்பாடுகள் ஆசியாவில் தோற்றம் பெறுகின்றன.

யப்பானோ மாறும்சூழலை உணர்ந்து அமெரிக்க கூட்டால் இனி அதிகம் பயன் இல்லை என உணர்ந்து தனதுமுழுக்கவனத்தையும் ஆசியாவிலே செலுத்தமுயல்கின்றது. அமெரிக்காவோ கிழக்காசிய பசிபிக் பிராந்தியத்தில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இத்தகைய நிலையில் ஏனைய ஆசிய நாடுகள் அவதியுறுகின்றன. இந்தியாவோ இச்சூழலில் தான் எவ்வாறு தப்பிப் பிழைப்பதென தடுமாறுகின்றது. ஒரு காலகட்டத்தில் தமது தொழிலாளரின் உதிரத்தில் கட்டிய பொருண்மிய சாம்ராச்சியங்களைக் கொண்டிருந்த தென்கொரியா, தைவான் போன்ற நாடுகளின் வளர்ச்சி வீதம் இப்போது வீழ்ச்சியடையத் தொடங்குகின்றன. 1986-90 இடையில் சராசரி 10 8 வீதமாக இருந்த தென்கொரியாவின் வளர்ச்சி 1992-ம்ஆண்டில் 3.1வீதமாக விழுந்துள்ளது. அதே போலவே தைவான் வீழ்ச்சி காண்கின்றது. இப்போது அதன் வளர்ச்சி வீதம் 5.3 வீதம் ஆகிவிட்டது. கொங்கொங்கோ சீனாவோடு 1997இல் இணைந்துவிடும் சிங்கப்பூரோ தனது வளர்ச்சி நிலையை காப்பாற்ற சீனாவோடான தனது இனவழித் தொடர்பினை பயன்படுத்திதன் நலன்களை பாதுகாக்க முயல்கின்றது. புதிதாக வளர்ச்சி பெற்று வரும் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா போன்றவை புதிய மாறும் சூழலை எதிர்நோக்குவதில் சிரமப்படப்போகின்றன. (1992 ஆண்டில் மலேசிய வளர்ச்சி விகிதம் 10·6 வீதம், தாய்லாந்தில் விகிதம் 12 2 வீதம்) ஐரோப்பிய ஒன்றியம் போல, நப்தா (NAFTA) போன்ற ஆசியப் பகுதியிலும் ஒரு சுதந்திர வணிக அமைப்பொன்றை ஆசிய பொருண்மிய குழுமம் (Asian Economic Bloc) என்ற பெயரில் அமைக்க மலேசியா எடுத்த முன் முயற்சி யப்பானாலும், அமெரிக்காவாலும் முளையிலேயேகிள்ளி எறியப்பட்டன.

இப்போது ஆசியாவின் புலிகள் என வருணிக்கப்பட்ட தென்கொரியா தைவான் போன்ற நாடுகளில் (இவையே புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகள் NIC - Newly Industrialised Countries) எனப்பட்டன. தோன்றிய தரத்திலும் அளவிலும் வளர்ந்த தொழிலாளர் வர்க்கம் புதிதாக உருவாகிய மத்திய வகுப்பு இணைந்து சுய வேதனம் அதிகளவு சனநாயக உரிமைக்காக போராடத் தொடங்கிவிட்டன. ஏனென்றால் இந்நாடுகளின் தொழிலாளர்கள் உலகிலே மிக மோசமான ஆலை விபத்துக்கள் நடக்கும் மோசமான சுகாதாரக் கேடுகள் நிரம்பிய ஆலைகளில் வாராந்தம் உலகிலே ஆகக் கூடிய தொழிலாளர் வேலை நேரமான வாரத்திற்கு 54 மணித்தியாலம் உழைத்து உருக்குலைந்து போய்விட்டனர். எனவே யப்பான் போன்ற இந் நாடுகளிலிருந்தும்வேறுமலேசியா இந்தோனேசியா போன்றநாடுகட்கு மூலதனத்தை நகர்த்தத் தொடங்குகின்றன. (இத்தகையசூழலில் சிறிலங்காவும்இப்போதும் தானும் NIC தகுதியை அடையப்போவதாக பகல் கனவு கண்டு வருகின்றது.) இதுவே இப்போதைய புதிய ஆசிய ஒழுங்கின் ஆரம்பமாக இருக்கின்றது.

எனவே இராணுவ வல்லாண்மையால் செய்ய முடியாதவற்றை பொருண்மியம் மூலமாக செய்ய முனையும் ஒரு புதிய ஒழுங்கு. இது எவ்வாறாக இருந்தாலும் இங்கே ஒருசெய்தி இறுதியாக சேர்க்கப்பட வேண்டும்; இப்போது வெளி இராணுவங்கள் வெளியேறியதால் இராணுவச் சமநிலை மாறுபட்டநிலையில் ஆசிய அரசுகளின் பாதுகாப்பு குறைந்தநிலையில் அவை பொருண்மியப் போட்டிகள் புதையுண்டு போயுள்ள நிலையில் போராடும் தேசிய இனங்கள் புதுவழி காண வழியொன்று பிறப்பதாக கருதமுடியும் என்பதே அச் செய்தி.

# தென் மாகாணசபைத் தேர்தல் சிங்கள அரசியல் கட்சிகளின் பரீட்சை களம்

தென்னிலங்கையின் அரசியற் களத்தில் தென் மாகாணம் மீண்டும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ள தென் மாகாணம் 'கதிர்காம அழகி' எனப்படும் மனம் பேரி பொலிசாரால் கொல்லப்பட்ட காலம் முதலே ஜே-வி-பியினரின் செல்வாக்கு மிகுந்த பகுதியாகவே கணிப்பிடப்பட்டு வந்தது. 1987க்குப் பின்னான ஜே.வி பியினரின் புத்தெழுச்சிக் காலத்திலும் இப்பகுதி அவர்களின் கோட்டையாகவே கருதப்பட்டு வந்தது. இப்போது மீண்டும் மாகாண சபைத் தேர்தலை எதிர்நோக்கியிருப்பதன் மூலம் அரசியல்வாதிகளின் பலப் பரீட்சைக்களமாக இம் மாகாணம் மாறியிருக்கிறது.

93ஜூன் மாதத்தில் மாகாணசபைக்காக தேர்தலில் வாக்களித்த தென் மாகாண மக்கள் மீண்டும் இப்போது அதற்காக வாக்களிக்க நேரிட்டுள்ளது. சிறிலங்கா ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசா தலைமையிலான ஐ.தே.கவும் சுதந்திரக்கட்சிதலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கவிலிருந்து ஓரம்கட்டப்பட்டு வெளியேற்றப்பட்ட லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்கதலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் அன்றைய தேர்தல் களத்தில் மோதிய முக்கிய சக்திகளாக விளங்கியிருந்தன. எனினும் லலித்தும் பிரேமதாசாவும் கொலையுண்டபின்னர் மாகாணசபைக்கான மக்களின் முடிவில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளாமையில் அரசியல் இழுபறி நிலை தோன்றியது. கபடத்தனமாக ஆட்சியைஅபகரித்தஐ-தே-கவின் ஆட்சியை எதிர்த்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமையால் முதலமைச்சர் பதவியை ஐ-தே- கவின் எம் எஸ்- அமரசிறி துறக்க நேரிட்டது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அமரசிறி தொடங்கொட பதவியேற்றபோதும் அவரால் ஆட்சியை கொண்டு நடத்த முடியாமல் போகவே ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல்நடத்தவேண்டி ஏற்பட்டமை தெரிந்ததே.

## தேர்தலின் முக்கியத்துவம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் காமினி திசாநாயக்கவும், சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்காவும் ஐ. தே கவுடன் இணைந்து கொண்ட நிலையில் இடம்பெறும் தென்மாகாணசபைத் தேர்தலானது தென்னிலங்கை அரசியற் களத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கணிக்கப்படுகின்றது- பிரேமதாசா இல்லாத நிலையில் ஏற்பட்ட முதல் தேர்தல்களம் என்பதும் 'எனது கரங்கள் கறைபடிந்தவையல்ல' என்ற பகிரங்க முழக்கத்துடன் பதவிக்கு வந்த டி.பி. விஜேதுங்காவின் பத்து மாத கால ஆட்சி பற்றி சிங்கள மக்களின் மனநிலையை மதிப்பிடும் ஆய்வுக்குவழி சமைக்கும் என்பதும் இத்தேர்தலின் முக்கியத்துவத்தை அதிகரிப்பனவாகும். அத்துடன் ஐ.தே-கவிற்கு புதுவரவான அநுராவின் செல்வாக்கையும், மீள்வரவான காமினியின் பலத்தையும் மட்டிடுவதற்கும் இந்த தேர்தல் களம் உதவும் மேலும் 'சூரியகந்த'வில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் தென்னிலங்கை மக்களிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், ஐ.தே.கவின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு மத்தியிலும் அதன் செல்வாக்கு தளம் எந்த நிலையில் உள்ளது. என்பதையும் இந்த தேர்தல் எடுத்துக்காட்டும். அத்துடன் இ- தொ. காவை பிளவுபடுத்தி அதனுடனான உறவில் முறுகல் நிலையை ஏற்படுத்தியும், தன்னிச்சையான போக்கிலும், பௌத்த சிங்கள மேலாண்மைவாத சிந்தனையோடும்ஆட்சி நடத்தும் டி.பி. விஜேதுங்காவின் செயற்பாடுகளால் ஐ. தே.கவினுள் ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பூசல்களையும்இத் தேர்தல் வெளிச்சம் போட்டுக் காட்டும். இன்னும் அநுரா இல்லாத சுதந்திரக்கட்சியினதும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினதும் செல்வாக்கை அளவிடவும், லலித் ஆதரவாளர்களான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் குழுவின் ஆதரவை அறியவும் இத்தேர்தல் ஒரு அளவுகோலாக அமையும் என்பது வெளிப்படை இது தவிர தமிழர்களின் தேசிய உரிமைப் போராட்டம் தொடர்பாக எள்ளளவு விட்டுக் கொடுப்பு தானும் செய்யக் கூடாது எனக் கூச்சலிடும் சிங்கள மகா சம்மேளன பூமி புத்திரர்களுக்கும், எறும்பைக் கொலை செய்வதைக் கூட ஆதரிக்காத பௌத்த மதக் கொள்கையின் ஆதரவாளர்கள்யுத்தத்திற்கு ஆசீர்வாதம் வழங்க எப்படி முடியும் என்று இடதுசாரிகளின் மெல்லிய குரலுக்கும் எத்தகைய ஆதரவு இருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் கோடி காட்டும் எனலாம்.

## ஐ: தே. கவின் உட்பிளவுகள்

காமினி திசாநாயக்காவையும், அநுரா பண்டாரநாயக்காவையும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்துக் கொண்ட டி. பி. விஜேதுங்காவின் செயல் கட்சியின் பிரேமதாசா ஆதரவாளர்கள் மத்தியில் சலனத்தை ஏற்படுத்தியுள்ளது- இதனால் அவர்கள்

**நிமலராஜன்**

தமது கோபத்தை வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ வெளிக்காட்டி வருகின்றனர்.கட்சியில்சேரும் எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி, அமைச்சர் பதவி போன்றவை வழங்கப்படுவதைத் தொடர்ந்து, இக்கட்டான காலங்களிலும் நெருக்கடி மிகுந்த சூழல்களிலும் கட்சியைக் காப்பதற்காக உழைத்த பலர் தாம் ஓரம் கட்டப்படுவதாக எண்ணத் தலைப்பட்டுள்ளனர். இதனால் ஐ. தே. க. வில் இணைபவர்களை விடவும் கருத்து வேற்றுமை கொள்வோரே அதிகமாக இருப்பதாக கூறப்படுவது மிகையானதாக இருக்க முடியாது. இந்தஇழுபறி நிலையில் தென் மாகாணத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிதோல்வி அடைய நேரிட்டால் அதனால் கட்சியின் உட்பூசல்கள் விஸ்வரூபம் எடுப்பதைத் தவிர்க்க முடியாது. குறிப்பாக பௌத்த பேரினவாதத்தை எதிரொலிக்கும் விஜேதுங்காவின் போக்கிற்கும். பிரேமதாசாவின் தீவிர ஆதரவாளரானசிறிசேனகுரேயின்செயல்பாட்டிற்கும்,முன்னாள்ஜனாதிபதிஜே. ஆரின் மருமகனான பிரதமர்ரணில்விக்கிரமசிங்காவின் இரட்டை வேடத்திற்கும் இடையில் காணப்படும் இப்போதைய முரண்பாடுகள் தென்மாகாணத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்து அடுத்த கட்டத்தை எட்டும் என எதிர்பார்க்கலாம்.

## எதிரணிகளின் நிலை

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமன்றி சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணிக்கும் கூட இத்தேர்தல் முக்கியமான பலப்பரீட்சைக் களமாகும். கட்சியின் இருபது சதவீத வாக்குகளை தம்மால் கவர முடியுமென தம்பட்டம் அடிக்கும் அநுராவும்,முந்திய மாகாணசபைத் தேர்தலில் 14.54 வாக்குகளைப் பெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பலமான ஒரு சாராரும் ஆளும் கட்சியுடன் இணைந்துள்ள நிலையில் மக்கள் மத்தியிலான தனது ஆதரவை எடை போடும் தளமாகவே தென் மாகாணத் தேர்தல் சுதந்திரக் கட்சிக்கு இருக்கப் போகிறது. அத்துடன் முதலமைச்சராகபதவியேற்ற அமரசிறி தொடங்கொடவின் ஆட்சி கபடத்தனமானமுறையில் ஒரு சில நாட்களில் கவிழ்க்கப்பட்ட பின்னர், மீண்டும் தேர்தல் மூலம் ஆட்சிப் பொறுப்பைகைப்பற்றாவிடில் அது அக்கட்சிக்கு பெருத்த அவமானமாகவே இருக்கும்- மேலும் இந்த தேர்தலில் வெற்றி நோக்கி கட்சியை வழி நடத்தும் பொறுப்பு மேல்மாகாண முதல்வர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது- எனவே இது அவருக்கு ஒரு தனிப்பட்ட அரசியல் சவால் எனவும் கொள்ளப்படலாம்- இந்த தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஈட்டும் சாதனையைப் பொறுத்தே திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின்அரசியல் எதிர்காலம் அமைய இருக்கிறது என்பது உணரப்படக் கூடியதே. அதுவும் ஜனாதிபதித் தேர்தலுக்கான சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்காக நடைபெறவிருந்த பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டங்கள் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் திருமதி சந்திரிகா எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும் என்பதில் ஐயம் எதுவும் கொள்ள வேண்டியதில்லை-

தென்மாகாணத்தைப் பொறுத்தவரையில் மொத்த வாக்காளர்களில் தமிழர்கள் எட்டுசதவீதத்திற்கும்குறைவு எனலாம். எனினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிளவடைந்துள்ள நிலையில் செல்லச்சாமியின் ஐ. தே. க ஆதரவு பிரசாரம் எந்த அளவுக்கு தமிழர்களிடையே செல்வாக்குப் பெறுகிறது என்பதைக் கோடி காட்ட இது உதவும் எனக் கொள்ளலாம். தொண்டமான் தேர்தல் பிரசாரம் தொடர்பாககடைப்பிடிக்கும் மௌனத்தின் பொருளைப் புரிந்து கொண்டு தமிழ் வாக்காளர் வாக்கெடுப்பில்கலந்து கொள்ளாது ஒதுங்கி விடுவார்களா என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதே.

இவைகள் ஒருபுறமிருக்க சிங்கள மகா சம்மேளன பூமி புத்திரக் கட்சி யுத்தத்தை தீவிரமாக்கி, தமிழர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற பிரசாரத்தில் இறங்கி இருப்பதும், - விலைவாசி உயர்வு-வேலையில்லாப் பிரச்சினை - அப்பாவிகளின் உயிரிழப்பு - வளங்களின் அழிவு போன்ற இன்னோரன்ன காரணங்களைக் காட்டி அர்த்தமற்ற யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வாருங்கள் என்ற இடதுசாரிகளின் முனகலும் தென் மாகாணத்தேர்தல் களத்தின் நிகழ்ச்சிகளாக பதிய செய்ய வேண்டியவைகளே.

தென்மாகாண சபை தேர்தல் தொடர்பாக மூன்று மாவட்டங்களிலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகள் பொதுசன ஐக்கிய முன்னணி 52 சதவீதத்திற்கு ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கின்றன.பல சாரார் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்ட இக்கருத்துக் கணிப்பு செம்மையானதாக நிரூபிக்கப்பட்டால் கொழும்பு அரசியலில் குழப்பம் மலிவது தவிர்க்கவும் தடுக்கவும் முடியாததாகும்.

# மனிதனின் பரம வைரிகளான பக்டீரியாக்கள் ஆப்த நண்பர்களாகவும் செயற்படுகின்றன

அந்தத் தங்கச் சுத்திகரிப்புச் சாலையின் கழிவுகள் வெளியேறும் சாக்கடையிலிருந்து பாம்பின் பல்லிலிருந்து வழியும் நஞ்சு போல் சயனைட் கழிவுகள் கொட்டிக் கொண்டிருந்தது. பாதஇரசம், ஆசனிக் போன்றவை அதனுடன் கலந்து ஒரு நச்சுக் குழம்பாக வெளியேறிக் கொண்டிருந்தது. முப்பது வருடங்களுக்கு மேலாக மக்கள் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தனர். தங்கம் என்றால் வருமானம், வேலை வாய்ப்பு எல்லாம். அதனால் பொறுத்துக் கொண்டனர்.

பின்னர் மக்கள் பொறுமை இழந்தனர். எதிர்ப்புக்குரல் எழுப்பினர். அந்த நிறுவனம் ஏதாவது செய்தாக வேண்டும்! இந்த நிகழ்ச்சி அமெரிக்காவில் டகோடா மாநிலத்தில் நிகழ்ந்தது. ஜிம் விட்லாக் அந்த ஊரைச் சார்ந்த நுண் உயிரியலாளர். பக்டீரியாக்களை பெரிய தொட்டிகளில் வளர்த்து அதன் வழியாக கழிவுகளைப் பாய்ச்சினார். பக்டீரியாக்கள் சயனைட்டிலுள்ள காபன், நைட்ரஜன் இரண்டையும் பிரித்து உணவாக எடுத்துக் கொண்டன. இப்போது சயனைட்டு நீக்கப்பட்ட கழிவுகள் வைற்வுட் கிறீக் என்ற நதியில்தான் விடப்படுகிறது. நதி ஒன்றும் கெட்டுப் போகவில்லை. மீன்கள் சந்தோசமாக அங்கே வாழ்கின்றன என்கிறார் ஜிம் விட்லாக். இவ்வாறு பக்டீரியாக்கள் மூலம் கழிவு சுத்தப்படுத்தும் முறை 'உயிரி நிவாரணம்' (Bio-remediation) என அழைக்கப்படுகிறது.

பக்டீரியாக்கள் கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணியவை. இதனால் அவற்றை நுண்ணுயிரி என அழைக்கின்றனர். அவை ஒரு கலத்தால் ஆனவை. எப்படி ஆடு மாடுகளை பழக்கப்படுத்தி உபயோகித்துக் கொள்கிறோமோ அதுபோலவே நுண்ணுயிரிகளையும் அடிமைப்படுத்தி ஆபத்தற்றதாக மாற்றி இவ்வாறு உயிரி நிவாரணப் பணிகளுக்கு உட்படுத்துகின்றனர்.

பனிச்சறுக்கு விளையாட்டுத் திடலில் பனி உறைய வைக்க சில பக்டீரியாக்களைத் தூவுகிறார்கள். சில தங்கம், செப்பு போன்றவற்றை தாதுப் பொருள்களிலிருந்து பிரிக்க உதவுகின்றன இதனால் இவற்றைப் பிரிக்க சயனைட் அதிகமாக பயன்படுத்த வேண்டிய அவசியம் குறைகிறது சில வற்றிப் போன எண்ணெய்க் கிணறுகளை மீண்டும் ஊற வைக்கின்றன. சில டி. என். ஏ மூலக் கூறைத் துண்டிக்கும் என்சைம்களை வழங்குகின்றன. சில நமக்கு ஏற்கனவே அறிமுகமானவை. நொதிக்க வைப்பது. புளிக்க வைப்பது. ரொட்டி, சாராயம், சீஸ் பாலாடைக்கட்டி, யோகர்ட், காடி, வைன் போன்றவற்றைத் தயாரிக்க உதவும்.

எல்லா நுண்ணுயிரிகளும் இப்படி உதவிபுரிவன அல்ல. நம்முடைய மிகப் பழைய பகைவர்களும் இவர்களில் உள்ளனர். காலரா, டி. பி. போன்ற கொடியநோய்களை இவை உண்டாக்குகின்றன.

நமக்கெல்லாம் முன்பாக ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய உயிரி பக்டீ

(8ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளை... சிவப்பு...

## சிறுகதை

**ஈழநாதம்**
நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை.

அம்மா என்னை இப்பவும் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறா. அவ எப்பவுமே இப்படித்தான். அமைதியா இந்தகல்லில்இருந்துகொண்டு வாழைமரங்களுக்கு மேலால தெரிகிற வானத்தை இரண்டு கைகளிலும் முகத்தை வைச்சுக்கொண்டு நான் யோசிக்கிற நேரங்களில் எல்லாம் இப்படித்தான்என்னைஅம்மா கூப்பிடுறா அந்த நேரங்களில எல்லாம்எனக்கும் இப்பவாற மாதிரித்தான் கோபம் வரும்.

ஆனா... அம்மாவும் பாவம் என்னை இப்பவும் பக்கத்து வீட்டு அன்ரீன்ர சின்ன பபா மாதிரித்தான் நினைச்சுக் கொண்டிருக்கிறா. ஆனா நான் எவ்வளவு வளந்திட்டன் முற்றத்து மாமரத்துல நானா ஏறி ஊஞ்சலாடுற அளவுக்கு நான் வளர்ந்திட்டன் தானே.

இருந்தும் கூட இந்த வளத்தியில என்ன பிரயோசனம்? முந்தி பக்கத்து வீட்டு மாமா நான் ஏதாவது செய்து தரச் சொல்லி கேக்கிற போதெல்லாம் நீ வளர்ந்த பிறகு செய்யலாம் வளந்த மனிசன் எந்த பெரிய காரியத்தையும் செய்யலாம்' எண்டு சொல்லுவார். நானும் வளந்திட்டன் தானே! ஆனா ஏன் என்னால நான் நினைச்சதைச் செய்யேலாம போச்சுது? என்ர அன்பு வெள்ளையை காப்பாத்த ஏலாமப் போச்சுது?...

எனக்கு வெள்ளைன்ர நினைவு வந்தா பிறகு ஒண்டுமே பிடிக்காமப் போகுது. நெஞ்சு முழுக்க கண் முழுக்க பஞ்சு போல வெள்ளை நிறத்தோட கறுப்பு மாபிள்போல கண்ணோட வெள்ளைதான் தெரியுது. வேலிக்கரையில வெறுங்காலோட ஓடேக்க பெரிய முள்ளு குத்தின வேதினையாய் நெஞ்சு முழுக்க நினைவுமுழுக்க வலிக்குது.

இப்பவும் கூட எல்லாரும் படுத்தபிறகும்வெள்ளைவந்து என்னைக் கூப்பிடுற மாதிரி இருக்கும். துள்ளி எழும்பி பக்கத்தில படுத்திருக்கிற அம்மாவை எழுப்பி விளக்கை எடுத்தாவெள்ளையைகாணேலாது. அம்மாவைக் கேட்டா அவ சொல்லுவா 'இல்லையடா கண்ணா, வெள்ளை சுவாமியின்ர மடியில தானே நித்திரை கொள்ளும். உனக்கு வெள்ளையை மாதிரி இன்னுமொண்டு கொண்டுவந்து தருவார்தானே அப்பா' எண்டு.

நான் அம்மாவுக்கு ஒருபதிலும் சொல்ல மாட்டன் பேசாம திரும்பி படுத்துடுவன் 'இந்த அம்மா வேண்டாம். வேற அம்மா தரட்டுமா' என்று ஆராவது சொன்னால் நான் சம்மதிப்பனா...

எனக்கு இப்பவும் நல்ல நினைவு இருக்கு ... ஒரு நாள் விடிய நான் அந்த றோட்டுக்கரை செவ்வரத்தம் பூவை புடுங்குறத்துக்காக வேலிக்கரையோரமாகப் போகேக்கை மரத்தடியில 'கீச் - கீச் செண்டு கத்திக் கொண்டு வாலை ஆட்டினபடி வெள்ளையா நிண்டது-'வெள்ளை' எனக்கு அதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேணும் மாதிரி இருந்தது-

மெல்லமா குனிஞ்சி மண்ணில் கையை ஊன்றியபடி கிட்டப்போய் அதைப்பார்த்தேன். எனக்கு விருப்பமான மல்லிகைப் பூவைப் போல அது இருந்தது. கொஞ்சம் பயந்ததுபோலமெதுவாகபின்னுக்கு நகர்ந்து திரும்பவும் வாலை ஆட்டிச்சுது.

என்னைப்போலதான் அதுவும் எண்டு நான் நினைச்சன் ஏனெண்டா நானும் அப்பிடித்தான் தெரியாத ஆக்கள் வந்தா அவையைப் பார்த்துக் கொண்டே பின்னால பின்னால ஓடிடுவன்.

கொஞ்சநேரம் அதையே பார்த்துக்கொண்டு இருந்தன் பிறகு மெல்ல மெல்ல கிட்ட வந்துகாலை மோந்து பாத்து, பிறகு வாலை ஆட்டி ஆட்டி 'கீச் கீச்' சென்று கத்தீச்சுது 'என்னைத்தூக்கு' என்று தான் அது சொல்லியிருக்கும்

போல எனக்கு கிடந்தது. மெல்லமா பக்கத்து வீட்டு அன்ரி சின்னபபாவை தூக்கிற மாதிரிதூக்கிக் கொண்டு நான் உள்ளுக்கு வந்திட்டன்.

பின்னுக்கு கொண்டுவந்து ஒரு பெட்டிக்கை இருத்திக் கொண்டிருந்தபோது அம்மா வந்திட்டா 'ஏனடா தெரு நாயை உள்ளுக்கு கூட்டிவந்து வைச்சிருக்கிறாய் கண்ணா' எண்டுசொன்னபடியேஅதைப் பெட்டியோட தூக்கி எறிய ஆயத்தமா வந்தா நான் மெதுவாக மிக மெதுவாக அம்மாவிடம் கெஞ்சினேன்.

அம்மா சொன்னா 'இல்லைக்கண்ணா உதைத்தொட்டா வருத்தம் வரும்' எண்டு 'மல்லிகைப் பூவைதொட்டா வருத்தம் வருமோ' எண்டு நான் அம்மாவைக் கேட்டன் அம்மா என்னை ஒரு தரம் பார்த்தா பிறகு 'சரி' எண்டு சொல்லுற மாதிரி தலையாட்டிப்போட்டு உள்ளுக்குப் போட்டா.

அதுக்குப் பிறகு 'நேஸரி'க்குப் போற நேரம் தவிர நான் என்ர வெள்ளையோட மனசு முழுக்க நிறைஞ்சு நிண்ட அந்த நிறத்தையே சொல்லித்தான் நான் கூப்பிடுவேன் தான் முழு நேரமும் விளையாடுவன்.

எனக்கெண்டு என்ன சாப்பாடு தந்தாலும் இரண்டு பேரும் அதைச் சாப்பிடுவோம்- அம்மா அப்பா காண நான் சாப்பிடுவேன் நான் மட்டும் காண வெள்ளைசாப்பிடும்-

நாளோடு அம்மா வெள்ளையில் கொண்டிருந்தவெறுப்பும் போட்டுது- இப்ப அம்மாவுக்கு இருவரும் பிள்ளைகள் போல.

அந்த நாட்களில் எல்லாம் நான் அம்மாட்டை சண்டை பிடிச்சு வெள்ளைச் சட்டையைத்தான் போட்டுக் கொண்டு போவன். ஏனென்டா என்ர வெள்ளையன்ர நினைவு வாறபோதெல்லாம் நான் என்ர சட்டையை தொட்டுப்பார்த்து சிரிச்சுக் கொள்ளுவன் அப்பாட்டை சொல்லி தண்ணிப்போத்தல் புத்தகஉறை எல்லாமே வெள்ளை நிறத்தில ஆக்கிப்போட்டன்.

ஏனென்டா எவ்வளவுக்கெவ்வளவு நான் வெள்ளைன்ர சினேகிதனா மனத்திலயும் புறத்திலயும் இருக்கமுடியுமோ அந்த அளவுக்கு இருக்கிறதுக்கு நான் நிறைய விரும்பினேன்.

சந்தோசமா போன ஒரு நாளின்ர இரவில காது செவிடாகிற மாதிரி ஒரே சத்தம் கேட்டுது. அம்மா பதட்டத்தோட என்னை எழுப்பினா 'எழும்பு கண்ணா' பக்கத்தில ஆமி வெளிக்கிட்டிட்டாங்களாம்அம்மாவின்குரலில்கயிறு கட்டியமாதிரி ஒரு வித்தியாசம் இருந்தது. எனக்கு எதுவுமே விளங்கேல்ல ஆனா, பேசாம வெள்ளையையும் தூக்கிக் கொண்டு எழும்பீட்டன் அப்பா இரண்டு பேரையும் தூக்கி வைச்சிருக்கஇரவு சத்தமாக கழிஞ்சுது. சிறிது ஒய்ஞ்சு விடியிற நேரத்தில நான் வெள்ளையோட அப்பான்ர மடியில நித்திரையா போனன். அம்மாவும் அப்பாவும் ஏதோ கதைத்தார்கள்.

அம்மா என்னை திரும்ப எழுப்பின போது விடிஞ்சிருந்தது. வாசல்படியில சாமானுகளோட இரண்டு பெட்டி வைச்சிருந்ததுஅம்மாஎன்னை அவசரப்படுத்தினா 'கண்ணா கெதியா இதைக்குடி விடிய திரும்ப அடிக்க முன்னம் நாங்கள் போயிடவேணும்'' எண்டா ''எங்க அம்மா? நேசரிக்கா...'' வெள்ளையை தடவினபடி கேட்டன். அம்மா மெதுவாக சிரித்தா. அழுவது போலிருந்தது அது.

அப்பா சொன்னார் 'இல்லை...கண்ணா' உந்த சத்தங்கள் முடியுமட்டும் அம்மம்மா வீட்டிலபோய் இருந்துட்டுவருவம்'' எனக்கு நல்ல சந்தோசம் அம்மம்மாக்கும் வெள்ளையை காட்டலாம்

நான் புத்தகப்பையையும் எடுத்துக்கொண்டு வெளில வந்தன் ஆனா...அம்மா அதை திரும்பவாங்கி வைச்சிட்டா 'இதுகளை தூக்க ஒரு நேரம் வரும் அப்ப எடுக்கலாம்'' எண்டா. அவவின்ர முகம் ஏதோபோல, மூடின செம்பில வாய்வைச்சு கதைச்ச மாதிரி குரல் கொஞ்ச நேரத்துக்குள்ளேயே நாங்கள்வெளிக்கிட்டிட்டம் அப்பா பெட்டியையும் நான் வெள்ளைச்சட்டையையும் வெள்ளையையும் கொண்டு. அம்மா என்னை தூக்கியபடியே

பிறகு வந்த நாளெல்லாம் அம்மம்மா வீட்டில போச்சுது ஒவ்வொரு நாளும் காலைல பேப்பரைபாத்துட்டுசோர்வா மாறுவார் அப்பா. அம்மா 'எங்களுக்கும் ஒருநாள் விடியும்தானே' எண்டுமுணுமுணுப்பா ஏன் அம்மா அப்பிடி சொல்லுறாவோ தெரியா ஒவ்வொருநாளும் அம்மம்மா வீட்டு வேப்பமரத்துக்கு மேலாலவாற சூரியனோட பொழுது விடியுதுதானே...... எனக்கென்ன, நேசரிக்கு போற நேரமும் சேர்த்துநான் வெள்ளையோட விளையாடலாந்தானே

ஆனா, அதுவும் கொஞ்ச நாள்தான் திரும்பவும் சத்தங்கள்கேட்கதொடங்கிச்சுதுசைக்கிள்வெடிக்கிறமாதிரிகேட்ட சத்தங்கள் இப்ப முழக்கம் போலகேட்க தொடங்கிச்சுது சத்தம்கேக்கிற நேரமெல்லாம் வெள்ளை என்னட்டை ஓடிவரும் நான் அம்மாட்டை ஓடுவன் அம்மா கண்மூடிப்பிரார்த்தனைசெய்வா ஆனாபிரார்த்தனையை கேட்டு சத்தம் ஒருநாளும்கேட்காமவிடேல்ல

அப்பா சொன்னாரே சத்தம் முடியும் மட்டும்... எண்டு இன்னும் நிறைய சத்தம்அங்க இருக்குதுபோல அதுதான் தொடந்து கேக்குது அந்தஇரவும் அப்பிடித்தான், நாங்கள் வீட்டுக்கை சாப்பிட்டுக்கொண்டிருக்க வெள்ளை வெளி வாசல் படியில் படுத்திருந்த போது கிணத்தடிப்பக்கம் ஒரு மின்னல் தெரிஞ்சுது மின்னலோ முழக்கமோ முதல் வந்ததெண்டு தெரியாம...மயங்குற மாதிரி ஒரு பெரிய சத்தம்-

தொடந்து கேட்ட சத்தம் முடியிற வரைக்கும் என்னை கீழே படுத்திவிட்டு அம்மா பிராத்திச்சா- அப்பா மெல்லமா முதுகு தடவினார். எனக்கு நித்திரை வரும்போலவும் இருந்தது- சத்தம் நிண்டதும் எழும்பி அம்மாவையும் கூட்டிக்கொண்டு வெள்ளையைத் தேடி வெளில போனன்- வழமையா எண்டா வெள்ளை என்னட்டை வந்திருக்குமே...

ஏன் இன்னும் வரேல்லை எண்டு நினைச்சுக்கொண்... காலில ஏதோ தட்டுப்பட குனிஞ்சன் இதென்ன சிவப்பா... யோசிச்சுக் கொண்டே விளக்கை இன்னும் பதிச்சுப் பிடிச்சன்- குனிந்து பார்க்க அது...அது என்ர வெள்ளை சிவப்பாகி கிடந்தது- செவ்வரத்தம்பூமாதிரி...ஆனா சிதறி- பக்கத்துகொடில என்ர வெள்ளைச்சட்டையும் சிவப்பாக...

இப்பெல்லாம் என்ரவெள்ளை எனக்குகனவிலயும் பழையநினைவிலையும் தான்சொந்தமா இருக்கு- எனக்கு இப்ப எதுவுமே இல்ல மாதிரி ஒரு உணர்வு ..வெள்ளைநிறத்தில எதைக்காணவும் அழுகை வருது- செவ்வரத்தம் பூவைக் காணஅழுகை வருது- வெடிச்சத்தங்கள்கேககிறபொழுதில எல்லாம் மனசுமுழுக்க கண் முழுக்க வெள்ளை...சிவப்பு... வெள்ளை...சிவப்பாக, எனக்கு இப்பவேறஎல்லா நிறமும் மறந்து போச்சுது-

இப்பிடி கல்லில இருக்கிற நேரமெல்லாம் எனக்குள்ள இப்ப ஒருகேள்வி வருது-நான் நேசிச்ச வெள்ளை மாதிரித்தானா . என்ர அம்மா, என்ர அப்பா, என்ர எல்லாமும்... எல்லாம் என்றைக்காவது ஒரு நாள்சத்தம் கேக்கேக்கை சிவப்பா மாறிப்போகுமோ... நான் நேசிச்ச வெள்ளை சிவப்பான மாதிரி.

ஆனா, பக்கத்து வீட்டு மாமா சொல்லுவாரே... வளந்தபிறகு ஒரு மனிசனால எதையும் செய்யேலும்எண்டு. அப்பிடியெண்டா ......அப்பிடியெண்டா...

**ஆனந்தி**

---

**ஈழநாதம்**
நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

## இன்னமும் இங்கே வாழ்பவன் தமிழன்

எப்படி முடிந்தது இவர்களால்!
சிரித்துக் கதைத்து, திருவிழாவில் வடம் பிடித்து
கச்சேரி செய்து, கல்யாணவீடுகள் நடாத்தி ..
எப்படி முடியும்?

எரிபொருளுக்கு இங்கே
தடையென்றல்லவா சொன்னார்கள்!!
உரம் கொடுப்பதற்குக் கூட
அரசு விரும்புவதில்லையாமே!
பின்னர்
எப்படி இங்கே மனிதர்கள் வாழ்ந்தார்கள்?

வியப்பாக இருக்கிறதா அந்நியனே!
நாங்கள் தமிழர்
பசித்தபோதும் பல்லுக்காட்டாத பரம்பரை
மானமுள்ளவரை மனந்தளராத பழங்குடி

எங்கள் வயல்களிலொன்றும்
கள்ளிமுளைக்க வில்லை
ஆறுகள் ஓடாவிட்டாலும்
ஆழக்கிணற்றில் நீர் எடுக்க எங்களுக்குத் தெரியும்
குண்டுச்சத்தங்களுக்கிடையில் நடப்பது
குழந்தைகளின் விளையாட்டுப் போட்டி
ஊரடங்குகளில் கூட எங்கள்
ஊர் அடங்குவதில்லை

எங்கள் மண்ணில் குடியேறுபவர்களுக்கு
பூநகரியும் இதயபூமியும்
அண்ணன் சொன்ன அறிவுரைமொழிகள்!
கரும்புலிகள் உள்ளமட்டும்
காற்றும் கேட்டுவிட்டே வீசவேண்டும்
புரிந்து கொள்
இன்னமும் இங்கே வாழ்பவர் தமிழர்.

சந்திரலிங்கம் கெங்காதரன்

### பேராசிரியர் சு·வித்தியானந்தன் நினைவுப் பேருரை

முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையை 1994-05-08 ஆம் திகதி நடாத்த உத்தேசித்துள்ளோம்.

இந்த நினைவுப் பேருரையை வழங்க ஆர்வமுடையவர்கள் தங்களது சுய விபரங்களையும், பேருரையை வழங்க இருக்கும் மொழியையும் குறிப்பிட்டு 1994-03-11 ஆம் திகதிக்கு முன் எம்முடன் கடிதம் மூலம் | நேரடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

திகதி: 1994-02-23
(கி-8703)

---

### 6-ம் மாத நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



தாய் மடியில்:
16 - 04 - 1971

தாயக மண்ணில்:
29 - 09 - 1993

### வீரவேங்கை தாட்சாயனி
(சங்கரப்பிள்ளை விக்கினேஸ்வரி)
திதி: 25 - 02 - 1994

புலோப்பளைச் சமரில் பூமித்தாய் தத்தெடுத்த பூமகளே
சாவிலும் சரித்திரம் படைத்திட்ட மானமறத் தமிழ் மகளே
உன் தளராத நடையெங்கே தலை நிமிர்ந்த வீரமெங்கே
விண்முட்டும் புகழ்சேர வீரச்சாவினை அடைந்தாய்
கண்ணீரைச் சிந்துகின்றோம் காலமெல்லாம் வாடுகின்றோம்

18A முத்தவினாயகர் வீதி
யாழ்ப்பாணம்.

உன்பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரங்கள்
மைத்துனர்கள், தம்பி
(போராளி)

(7588)

---

### இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின்
# 14-வது இசை விழா

## 14ஆம் நாள் 25 - 2 - 94
## வெள்ளிக்கிழமை

### ஈ.எஸ். பேரம்பலம் வர்த்தக நிறுவனத்தின் ஆதரவில்

மாலை

**4. 00 - 5. 00 மங்கள இசை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| எம். சிவசுப்பிரமணியம் | என். ராமு |
| எஸ். செல்வகுமார் | என். ரவீந்திரன் |
| வீ. செல்வராஜா | ஆர். ரஞ்சன் |
| வீ. வரதராஜா | வீ. சபேசன் |
| | ஆர். முருகதாஸ் |

**5. 00 - 5. 20 பாட்டு**

எஸ். பாலமுருகன் எஸ். சாருமதி )
வீ. ஸ்ரீலேகா வீ. யேராணி ) பாட்டு
எஸ். ஹம்சானந்தி
எஸ். சுகிர்தா - வயலின்
எம். கஜன் - மிருதங்கம்

**5. 20 - 5. 40 வீணை இசை**

நாகச்சந்திரா அரவிந்தன் )
தயானி நாகச்சந்திரா ) வீணை
பி. ரதிருபன் - மிருதங்கம்

**5. 40 - 6. 15 பாட்டு**

கே. சுகிர்தா - பாட்டு
எஸ். சிவகலா - வயலின்
பி. ரதிருபன் - மிருதங்கம்

**6. 15 - 7. 00 பாட்டு**

பரமேஸ்வரி கணேசன் - பாட்டு
சாந்தநாயகி சுப்ரமணியம் - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**7. 00 - 7. 30 மங்கள விளக்கேற்றல்**

திரு. பே. நாகரெத்தினம் ஈ. எஸ். பி.
திரு. கே. கே. ஏ. கந்தையாபிள்ளை
திரு. பூ சகிதரன், திரு. ந. சத்தியரூபன் (சிறிநதியா)

அருள் உரை: பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர குருக்கள் (பிரதமகுரு துர்க்கை அம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பளை)
தலைவர்: திரு. சீ. வி. கே. சிவஞானம்
பிரதம விருந்தினர்: பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி
திரு. செ. சம்பந்தநாதன் (முகாமையாளர் இ. வங்கி 2-ம் கிளை)
சிறப்பு விருந்தினர்: திருமதி பி. எஸ். ஸ்கந்தராஜா (அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி)

**7. 30 - 8. 30 கெஞ்சிற் கச்சேரி**

பி. நாகேந்திரம் - நாதஸ்வரம்
ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்
பி. கணேசன் - தவில்
சதா வேல்மாறன் - கடம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

விக்னேஸ்வரி சரவணமுத்து

வாழ்த்துவோர்:
### சைமன் வர்த்தக நிலையம்
பலாலி றோட், திருநெல்வேலி.

(கி - 8696)

---

# மாபெரும் கராட்டிக் கண்காட்சி

## யாழ்ப்பாணக் கல்லூரி லியோ கழக ஆதரவில்

### கழகத்தின் சமூக அபிவிருத்திப் பணிகளில் ஒன்றாக வட்டுக்கோட்டை-சித்தன்கேணி பிரதான பொதுவீதி மீளமைத்தல் உதவி நிதிக்காக

தொன்மையான வர்மக் கலையான கராட்டி சாகசக்காட்சி முதல் தடவையாக வட்டுக்கோட்டையில், மக்களுக்கு பெருவிருந்தாக அளிக்கப்படுகின்றது.

ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS
SHOTOKAN

### அக்கடமி ஒவ் ஒரியன்டல் மார்ஷல் ஆட்ஸ் (சோட்டோகான்) கராட்டி கழகத்தினரின் அதிநுட்ப கராட்டி வித்தைகள்

எமது உடம்பில் ஒரு புண் ஏற்பட்டு சீழ் வடிந்து சீரழிந்தால் எப்படியோ அப்படியே எமது ஊர் மத்தியில் ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி குண்டும், குழியுமாக, சேறும் சகதியுமாக உருக்குலைந்து போவதும், இதனைக் கவனியாது விடுவது முறையா? சிந்தியுங்கள்!

எமது ஆக்கப் பணிக்கு ஆதரவு தாருங்கள்.
உங்கள் ஆதரவே எம்மை ஊக்கும் உந்து சக்தி.
பார்த்தவர்கள் பரவசப்படுவீர்கள்!
பார்க்காதவர்கள் ஆதங்கப்படுவீர்கள்!!

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி திறந்தவெளி அரங்கு
காலம்: 2-3-1994 புதன்கிழமை பி. ப 6.00 மணி
**அன்பளிப்பு: 250/-, 100/-, 50/-, 20/-.**

விளம்பர அன்பளிப்பு:-
அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம் லிமிற்றெட், வட்டுக்கோட்டை.

(கி-8698)

---

## பசன் கன்றுகள் முற்றிலும் இலவசம்
### ( Passion Fruit Plants )

ஜாம், மூடியுடன் 400g ஹொர்லிக்ஸ், வீவா போத்தல்களில் ஏதாவது ஐந்து (5) எம்மிடம் ஒப்படைக்கும் போது போத்தல்களுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் பசன் கன்று ஒன்றை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ள வரை மட்டுமே.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD,**
NO, 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பசன் பழங்கள் நாம் கொள்வனவு செய்கின்றோம்.

(கி-8700)

# வடக்கில் அரச பயங்கரவாதம்

**1993 நவம்பர் 7 ம் திகதி முதல் 1994 ஜனவரி 6-ம் திகதிவரை யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அரச பயங்கரவாதம் புரிந்த அட்டூழியங்களை கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலசஞ்சிகை ஒன்று நிரற்படுத்தியுள்ளது. இதன் முற்பகுதியை இங்கு தருகின்றோம்.**

கீழே தரப்படுபவை 1993 நொவம்பர் 7ஆம் திகதிமுதல் 1994 ஜனவரி 6ஆம் திகதி வரை இரண்டு மாதங்கள் சிறிலங்காப்படைகள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் நடாத்திய நாற்பதுக்கும் அதிகமான தாக்குதல் சம்பவங்களின் மாதிரியாகும்: தாக்குதல்கள் வானிலிருந்தும் (குண்டுவீச்சு, ஹெலிதாக்குதல், எறிகணை) கடலிலிருந்தும், மீனவர்கள் மீது தாக்குதல், மற்றும் தரைத் தாக்குதல் (குடியிருப்புப் பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதல்) என்றும் மேற்கொள்ளப்பட்டன. இவை துன்பப்படும்மக்களைக் கண்டு கொள்ளாமல் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரமாகும். பதிவாகியுள்ள இந்த நாற்பது சம்பவங்களில் 73 அப்பாவிகள் கொல்லப்பட்டனர். 193க்கும் அதிகமானவர்கள் காயப்பட்டனர். மீனவர்களைத்தவிர, சிறார்களும் வயோதிபர்களும் அநேகமாகவயோதிபப்பெண்களும்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதற்குக் காரணம் வெளியேற்றம். தவிர, ஓடியாடித் திரியக் கூடியவர்களும், இளம்மட்டங்களும் பாதுகாப்பைத்தேடி ஓடி விடுகிறார்கள் ஜெட் குண்டு வீச்சு விமானங்களைக் கண்களால் பார்க்க முடியுமே ஒழிய, சத்தத்தைக் கொண்டு முன்கூட்டியே விமானம் வருவதை அறிந்து கொள்ள முடியாது. குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசப்போவதாக சமிக்ஞை எதுவும் காட்டுவதில்லை. எட்டிய தகவல்களின்படி, இந்த நாற்பதுக்கும் அதிகமான தாக்குதல்களில் ஒரு புலி தானும்பாதிக்கப்படவில்லை.

எமது நொவெம்பர் இதழ் ஆசிரியத்தலையங்கத்தில் எழுதியது போல், நாட்டின் ஐக்கியத்துக்கு தன்னை அர்ப்பணித்திருப்பதாகக் கூறும் அரசுமக்களின் நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அரசியல் நடவடிக்கைகள் மூலம் மக்களைவென்றெடுக்கவேண்டும். மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களால் என்ன அரசியல் நன்மை அல்லது இராணுவ நன்மை இருக்கிறதோ எமக்குத் தெரியாது.

வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், தேவாலயங்கள் வேண்டுமென்றே குறிவைத்து தாக்கப்படுவதாக மக்கள் நம்புகிறார்கள். நொவம்பர் 15 1993 இல் கிளிநொச்சி ஆஸ்பத்திரி மகப்பேற்று வார்ட் மீது குண்டு போடப்பட்டு தாயும் இரண்டு குழந்தைகளும் கொல்லப்பட்டார்கள். மூன்று நாட்களுக்கு முன்னர் புலிகள் பூநகரியில் கைப்பற்றிய டாங்கி அப்பகுதியில் இருப்பதாகக்கிடைத்த உறுதி செய்யப்படாத தகவலை வடுத்து கிளிநொசிசி ஆஸ்பத்திரியின் மீது குண்டு வீசப்பட்டது சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையை அண்டிய பாதுகாப்பு வலயத்தினுள் பலாலி மற்றும் மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் வீழ்ந்தன. பலகோயில்கள், தேவாலயங்கள் அருகிலும் குண்டுகள் வீசப்பட்டன புனித யாகப்பர் தேவாலயமும், வரணியில் ஒரு இந்துக் கோயிலும் பாரிய சேதங்களுக்கு உள்ளாயின. குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் மீது நொவெம்பர் 11 ஆம்திகதி நேரடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 5ஆம் திகதி இரண்டாவது தடவை யாகப்பர் ஆலயத்துக்கு அருகில் உள்ள சந்தையின் மீது (சின்னக்கடை) குண்டுகள் வீசப்பட்டன. இரண்டு சம்பவங்களிலும் மொத்தம் 33 பேர் கொல்லப்பட்டனர்.

பயத்திலும், மன அதிர்ச்சியிலும் வாழும் மக்கள் குண்டுகள் தம்மீது குறி வைத்து வீசப்படவில்லை என்று சம்பவங்களை நியாயப்படுத்தித் திருப்திப் படுவது மனித இயல்பு. அல்லாவிட்டால் வாழ்க்கை பைத்தியமாகி விடும். இருந்தும் மக்கள் மத்தியில் மன உளைச்சல் அதிகளவில் காணப்படுகிறது: உதாரணமாக, புனித யாகப்பர் ஆலயத்துக்கு அருகாமையில் வாழும் சிலர் 200 யாருக்கு அப்பால் 4-ம் குறுக்குத் தெருவில் உள்ள கட்டடம் மீது இலக்கு வைத்துத்தாக்கப்படுவதாகக் கருதினார்கள். ஜனவரி 5-ம் திகதி தாவடியில் குண்டு வீசப்பட்டது. இதனால் மூன்று வீடுகள் அழிந்தன. ஒரு குழந்தையும் மூன்று பெண்களும் கொல்லப்பட்டார்கள். ஆனால் அந்தப் பகுதியில் இருந்த புலிகளின் முகாம்கள் மீது ஒரு குண்டு தானும் போடவில்லை. துக்கம் கலந்த நகைச்சுவையினால் யாழ்ப்பாண மக்கள் அவலமான எதார்த்தங்களிலிருந்து தமது கவனத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள்: சிறிலங்கா விமானப்படையில் குண்டு வீச்சின் போது பாதுகாப்பான இடம் விடுதலைப் புலிகளின் முகாம்தான் என்று யாழ்ப்பாணத்தில் பகடி விடப்படுகிறது.

வரவேற்பில்லாத அரசியல் சூழலில் சிக்கியிருக்கும்இராணுவ அதிகாரிகள் எமக்கு ஓரளவு அனுதாபம் என்றாலும் அந்த அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் அதற்குப் பொருத்தமானவர்கள் அல்லர்: இரத்தம் சிந்துவதைவிட்டுத் தான் களைப்படைந்து விட்டதாகவும் இனிமேல் தான் ஆன்மீகவாழ்க்கைவாழப்போவதாக ஒய்வு பெறும் விமானப்படைத் தளபதி சண்டே ரைம்ஸ் (ஜனவரி 16) பத்திரிகைக்குக் கூறியுள்ளார். அவர் மேலும், தான் பாரபட்சமில்லாமல் நடந்து கொண்டதாகவும், தான்கடமைகளைச் சரியாக நிறைவேற்றி உள்ளதாகவும் கூறியுள்ளார். அவரைநாம் வாழ்த்தும் அதேவேளை விமானப் படை யாழ்ப்பாணத்து மக்களிடம் பாரபட்சமில்லாமல் நடந்து கொள்கின்றது என்று கூற முடியுமா?

(இக்கட்டுரையின் இறுதியில் மேல்குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசபடைகள் பொதுமக்கள் மீது நடாத்திய தாக்குதல்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது):

(நன்றி; Counterpoint)

# "பல்கலைக்கழக கல்வி அந்நியருக்கே நமது மக்களுக்கு கிடைப்பதில்லை"

**யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் கருத்தரங்கில் ''வடக்கு கிழக்கின் சமூக சுகாதார கோட்பாடுகளும் அதன் நடைமுறைத் தாக்கங்களும்'' எனும் தலைப்பில் யாழ் பல்கலை மருத்துவபீட விரிவுரையாளர் திரு. செ. சு. நச்சினார்க்கினியன் வழங்கிய தகவல்கள்.**

மூன்றாம் உலகநாடுகளில் நெருப்புக் காய்ச்சல், மலேரியா, ஈரல் அழற்சி, இரத்த சோகை போன்ற நோயினால் நாட்டின் அரைப்பங்கினர் பாதிப்படைந்து வருகின்றனர்- ஏன் குறிப்பாக இலங்கையில் வடக்கு, கிழக்கில் யாழ்ப்பாணத்திலும், திருமலையிலும் இந்நோய் பெருமளவில் உண்டு. இது மலத்தின் மூலம் பரவி வருகின்றது. இந்நோய்களை வராது தடுக்கும் முறைகளை வைத்தியர்களே வழிநடாத்திச் செல்ல வேண்டும் என எண்ணியிருந்தோம். ஆனால் இது வழமைக்கு மாறாகி விட்ட கருமமாகியுள்ளது.

நமது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழக கற்கைநெறி முடிவடைந்தவுடன் பாஸ் எடுப்பதும் - விசா எடுப்பதும் அமெரிக்கா போன்ற அந்நிய நாடுகளிலேயே தமது மூளைகளைப் பயன்படுத்த விரும்புகிறார்கள்.

இல்லாவிடில் வைத்தியர்களாக வெளியேறுபவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை அல்லது கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிகளிலேயே வேலை தேட விரும்புகிறார்கள். இதனால்தான் நமது மக்கள் ''பெரும் பிரச்சினைகளை'' நோய்களின் தாக்கத்தினால் பெருமளவில் பாதிப்படைய நேரிடுகிறது.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்து பெரிய வைத்தியசாலைகளிலும் இவர்கள் சேவையாற்றுவதால் 20 சதவீதமானவர்களே நன்மையடைகின்றனர்: 80 வீதமான கிராம மக்களுக்கு இவர்களதுசேவை சென்றடைவது இல்லை. இவர்கள் கிராமங்களில் வேலை செய்வதைக் கெளரவக் குறைவாக எடுத்துக் கொள்கிறார்கள்.

இரண்டாயிரமாம் ஆண்டில் எல்லோரதும் குறைகளை ஓரளவிலாவது நீக்கி மக்களை நோயிலிருந்து காப்பாற்ற குடும்பநல சேவையாளர்களையாவது கிராம ரீதியாக செயற்படுத்தி வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்து சுகாதார வழியில் செயற்படுத்த திசை திருப்புவதன் ஊடாக நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

நோயற்ற வாழ்வே சுகாதாரம். இது உலகம் பூராகவும் நிலவி வந்த பொதுக் கருத்தாகும்- நோயற்றதன்மை மட்டும் சுகாதாரம் அல்ல- ஒருவரது உடல் நலம், உளநலம் பாதிப்படையாது இருக்க ஆன்மீக ரீதியிலும், சமூக ரீதியிலும் ஈடுபடுவதே சுகாதாரம் எனப்படும்-

வடக்கு-கிழக்கில் நோயின் தன்மை மலங்களின் ஊடாகவே வேகமாக பரவி வருகின்றது- குறிப்பாக யாழ்- மாவட்டம், திருமலை மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல் சுகாதார சீர்கேட்டினால் பரவி வருகிறது- இதேபோல ஆரம்பத்தில் மலேரியா கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு என்ற நிலையிலிருந்து தற்போது யாழ்ப்பாணம் வரை வந்து சேர்ந்துள்ளது. இதனது தாக்கம் கோடிக்கணக்கான இரத்த அணுக்கள் உடைக்கப்படுவதனால் இரத்தச் சோகை ஏற்பட்டு மூளையின் வாயிலாக பாதிப்பினை ஏற்படுத்துகின்றது-

வடக்கிலும் தென்தமிழீழத்திலும் உணவுப் பற்றாக்குறை இருப்பதனாலும், போசாக்கான உணவுகள் மக்களைச் சென்றடையாததனாலும் உடல் வளர்ச்சி பாதிப்படைந்து மனவளர்ச்சி பாதிப்படைவதினால் சந்ததியையும் பாதிக்கிறது-

ஒருவருக்கு நோய் என்பது தன்னைப் பாதுகாப்பது மட்டுமல்ல, சமூகத்தில் உள்ளவர்களுக்கும் வராது கவனிக்க வேண்டும் என்பதாகும்- இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற சில நோய்கள் சமூகத்தில் உள்ள மேல்மட்டத் தவருக்கும் கொலரா, வாந்திபேதி, பிளேக் போன்ற நோய்கள் சமூகத்தின் கீழ் மட்டத் தவருக்கும், பால்வினை போன்ற சில நோய்கள் சமூக நடத்தைகளினாலும் ஏற்படுகின்றன-

இவ்வாறான சூழ்நிலையில் தான் பொதுச் சுகாதாரம் (Public Health) உருவாக்கப்பட்டு அரச சட்டங்களின் ஊடாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்துவதன் ஊடாக மக்களைக் காப்பாற்றலாம்-

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு குடும்பநல சேவையாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதாரப் போதனாசிரியர்களின் பங்கு பெருமளவில் காணப்பட வேண்டும். ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் 600 குடும்பத்திற்கு ஒரு குடும்பநல சேவையாளராவது இருக்க வேண்டும். அதாவது வடக்கு கிழக்கில் 917 குடும்பநல சேவையாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 347 பேரே உள்ளனர். அதிலும் அம்பாறை, திருமலை ஆகிய இடங்களில் 129 சிங்களவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதே வேளை தென்னிலங்கையில் தேவைக்கு அதிகமான குடும்பநல சேவையாளர்கள் கடமையாற்றுகின்றார்கள்- இவ்வாறு வடக்கு - கிழக்கு பகுதியானது சுகாதார நடவடிக்கைகளில் பாதிப்படைந்த தொன்றாகக் காணப்படுவதோடு சிறிலங்கா அரசு சுகாதாரம் சம்பந்தமான நடவடிக்கையிலும் சிங்களவர்கள் சார்பாகவே தமது யாப்பினையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இதேவேளை தமிழர்களுக்கு என- உலக சுகாதார ஸ்தாபனத்தினால் (WHO) ஒதுக்கப்பட்ட நிதி பல தடவைகளில் சிங்கள இனத்தவர்களுக்கே போய்ச் சேர்ந்துள்ளது- இவ்வாறான நடவடிக்கையினால் வடக்கு, கிழக்கு சுகாதாரம் எத்தளவிற்கு கவனிக்கப்படுகின்றது என்பது யாவரும் அறிந்ததே-

மேலும் உதவி வைத்தியர் பயிற்சி நெறி யாழ் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றது- ஆனால் யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த ஐந்து வருடங்களாக இக்கற்கை நெறிக்கு முடிவிழா வைக்கப்பட்டுள்ளது-

எனவே சமூக சுகாதாரப் பழக்க வழக்கங்களை நாமே ஏற்படுத்திக் கொண்டால் ஓரளவிற்காவது எம்மை நோயிலிருந்து பாதுகாத்து நோயற்ற வாழ்வுக்கு வழிவகுக்கலாம்-

தொகுப்பு:
**ரமேஷ்**

**கம்பியூட்டர் கல்வி**

**BASIC LANGUAGE**
**4 MONTHS**

திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம்: 28-02-94
மணி: 10-30
கூடிய செய்முறைப் பயிற்சி
இலவச அச்சடித்த பாடக் குறிப்பு, பயிற்சி முடிவில் சான்றிதழ்.
கட்டணம்:
மாதம் 400/- மட்டுமே;

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET,
JAFFNA.
(இ-8707)

# 500 கோடி ரூபா சூழல் பாதுகாப்பு திட்டம்; வடபகுதி நிதிக்கு நேர்ந்த கதி என்ன?

## பதில் சொல்கிறார் தேவநேசன் நேசையா

உலகவங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சூழல் பாதுகாப்புத் திட்டத்தில வடபகுதி திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளது- இத்திட்டத்தை வடபகுதியில் அமுல்படுத்தப்படாமைக்கு அரசியல் ரீதியான காரணங்களே தடையாக உள்ளதாக சூழல்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

சுற்றுப்புறச் சூழலில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கும், சுற்றுப்புறச் சூழலில் பௌதீக, இரசாயன உயிரியல் சமநிலையை ஏற்படுத்துவதற்கும், இச்சமநிலையைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கும் இதன் மூலம் சூழலைப் பாதுகாப்பதற்கும் ஒரு நீண்ட காலத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. உலக வங்கியின் உதவியின் கீழ் பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சுமார் 500 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் இரண்டு ஆண்டுகளில் குறித்த இலக்கை அடையும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் சுமார் ஐம்பது வீதமான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன.

மேற்படி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பெரியளவிலான சூழல் பாதுகாப்புத் திட்டங்களில் இதுவும்ஒன்று இத்திட்டம்இலங்கைமுழுவதற்கும்அமுல்படுத்தப்படுவதற்காகவே ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டது. அதற்கான நிதியும் பெறப்பட்டது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படுவதற்கான உத்தரவு கிடைத்ததும் வடபகுதிக்கான நடவடிக்கைகள் அனைத்தும் அத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டு விட்டது- தற்போது மேற்படி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி உதவி முழுவதும் ஏனைய பகுதிகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டு வருகின்றது-

இந்த நிதியின் கணிசமான பகுதி "வில்பத்து" "யால" ஆகிய பகுதிகளில் வனப்பாதுகாப்பு மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு ஆகிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் ஏனைய பகுதிகளிலும் இதே போன்ற நடவடிக்கைகள் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆங்காங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

உலகவங்கியின் மேற்படி உதவித் திட்டத்தின் கீழ் வடபகுதியிலும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமைக்கு அரசியல் ரீதியான காரணங்களே பெரிதும் தடையாக உள்ளதாகப் பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. தேவநேசன் நேசையா கூறுகின்றார்-

எரிபொருள் மற்றும் மின்சார வசதியின்மையால் வடபகுதியின் விறகுத் தேவைக்காகப் பெருமளவு மரங்கள் அன்றாடம் வெட்டி அழிக்கப்பட்டு வருகிறது என்றும் இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வடபகுதியில் மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவது அதிகமாக உள்ளது. இந்தநிலையில் சாத்தியமான சூழல் பாதுகாப்பு என்பது புதிதாக மரங்களை நாட்டுவது என்பதைவிட மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதை முடிந்தவரை தடுத்து நிறுத்துவதாகத்தான் இருக்கும் என்றும் இதை வடபகுதியில் மேற்கொள்ள மேற்படி திட்டத்தில் வகை செய்திருக்கலாமே என்று திரு. தேவநேசன் நேசையாவிடம் கேட்டபோது விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதாக இருந்தால விறகுக்குப் பதிலாக மாற்று எரிபொருள் வழங்கப்பட வேண்டும்- இதற்கு தேவையான எரிபொருள்களை வடபகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது மின்விநியோகத்தை மீண்டும் வடபகுதிக்கு ஏற்படுத்த வேண்டும்- ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இவை போன்ற நடவடிக்கைகளை மேற்படி உலக வங்கியின் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளுவது என்பது சாத்தியமில்லை என்றும் இதற்குதற்போதைய அரசியல், இராணுவ காரணிகள் முழுமையான முட்டுக்கட்டையாக உள்ளன என்று பதிலளித்தார்-

இந்த வகையில் நோக்கினால் உலக வங்கியின் சூழல் பாதுகாப்புத் திட்டம் வடபகுதிக்கு உசிதமற்றதாக தோற்றமளிக்கிறது- இத்திட்டத்தின்கீழ் வடபகுதிக்குச் சாத்தியமானதும் இராணுவ அரசியல் ரீதியான அனைத்து முட்டுக்கட்டைகளையும் ஊடறுத்துச் சென்று நடைமுறைப்படுத்தக்கூடிய உசிதமான திட்டம் ஒன்று வடபகுதியில் இருந்துதான் தமது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் திரு- தேவநேசன் நேசையா தெரிவித்தார்-

காலங்கடந்த பின்பு வெளிவரும் இந்த அறிவிப்புக்கு ஏற்ப வடபகுதியில் இருந்து சாத்தியமான சூழல் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டால் அது மேற்படி அமைச்சுக்குச் சென்றடைந்து நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி கிடைக்கும் போது, சூழல் பாதுகாப்புக்கான உலக வங்கித்திட்டத்தின் கால எல்லை கடந்து விட்டதாகக் கூறும் உலக வங்கி அதிகாரி ஒருவரின் ஒப்பமிடப்பட்டகடிதம் ஒன்று சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அலுவலக மேசைக்கு வந்து சேரும் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்-

## மனிதனின்

ரியா. எளிமையான உடல் பிளவு முறையில் அபிவிருத்தி செய்து கொள்ளும் இனவிருத்தி. இவை தான் பூமியில் உச்ச எண்ணிக்கையில் உள்ள உயிரிகள். விதங்களில் பலவாகவும் திறமையில் உயர்ந்தும், பயனுள்ளவையாகவும் இருப்பவை -மிக மிக மோசமான கொலை பாதகர்களையும் கொண்டுள்ளவை;

இந்த நுண்ணுயிர்கள் நம்மைச் சுற்றி எங்கும் உள்ளன. நமக்குள்ளும் உள்ளன. நட்சத்திரங்களையாவது எண்ணிவிடலாம்; இவற்றை எண்ண முடியாது. தாயின் கருவறையிலிருந்து ஈரமாக பிசு பிசுவென்று வெளியில் வரும் குழந்தைதான் நுண்கிருமிகளே இல்லாத மனித உயிர். ஒரு சில மணி நேரத்தில் காற்று, டாக்டர்களின் கைகள், தாயின் பால் இவற்றிலிருந்து பாக்டீரியாக்கள் அந்த சிசுவின் உடலுக்குள் நுழைந்து குடியேறி விடுகின்றன? சாகும்வரை அவை நம்மை விட்டுப் பிரிவதில்லை செத்த பின்பும் உடலை வீங்க வைத்து வேடிக்கை செய்வதும் இவையே நம் குடலில் குடியேறி தினமும் நம் உணவைச் செரிக்க வைத்து தாமும் உண்டு நமக்கு உதவுகின்றன,

பெரிய பெரிய உருளைத் தொட்டிகளில் கரித்தூள். கிலேகர் எனப்படும் ஒரு வகை மண் இவற்றை நிரப்பி அதில் பாக்டீரியாக்களை உணவூட்டி வாழ விட வேண்டும். ஒவ்வொரு துகளிலும் பல ஆயிரம் பாக்டீரியாக்கள் ஒட்டிக்கொண்டு பல்கிப் பெருகி வாழும். இது தான் உயிரிஉலை என்பது. இதில் கழிவு நீரை ஒரு பக்கம் விட்டால் அது மெதுவாக இறங்கி கீழே வருதற்குள் அதில் கரைந்துள்ள வேண்டாத வஸ்துக்கள் பாக்டீரியாக்களால் ஜீரணிக்கப்பட்டு கழிவு நீங்கிய சுத்த நீர் வெளிவரும்.

பெயின்ட் உரிக்க, உரிந்த பெயிண்டுகளை சிதைத்து அழிக்க, கிரியோ ஸோட்டு போன்ற மரங்களுக்குப் பூசும் ரசாயனங்களை அழிக்க- இப்படி பல வழிகளில் பாக்டீரியா நுழைந்து விட்டது. இப்போதெல்லாம் எண்ணெய்களை, பிசுக்குகளை நீக்கும் அற்புத சோப்பு வில்லைகளிலும், சோப்புத் தூள்களிலும் பாக்டீரியாக்களின் என்ஸைம்களைத்தான் கலக்கிறார்கள் இதற்கெல்லாம் அதிக காரம் மிகுந்த வெப்ப பகுதிகளில் வாழும் நுண் உயிரிகளைத் தேடிப்பிடித்து, பழக்கி என்சைம்களைப் பெறுகிறார்கள். அப்போதுதான் சோப்பு போன்ற காரப் பொருட்களுடன் என்ஸைம்கலந்து செயல்படும்.

- கலைக்கதிரிலிருந்து


பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குரிய
G.A.Q. 95

- G.C.E. A/L இல் 3 பாடங்கள் சித்தியுடன் 180 புள்ளிகளுக்கு குறையாமல் பெற்ற கணித - விஞ்ஞான- வர்த்தக- கலைப்பிரிவு மாணவர்கள் யாவரும் வெளிவாரிப் பட்டப்படிப்பு (G.A.Q.) நெறிக்கு பதிவினை மேற்கொள்ளலாம்.
- இதற்கான பதிவிற்குரிய விண்ணப்பப் படிவங்கள் எம்மால் எடுத்து வரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி
31-3-1994

- B.A. 93 பரீட்சை முடிவுகளை எமது நிறுவனத்தில் அறிந்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
திருமதி எஸ். அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-8708)



யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்
நடாத்தும்
முழுநிலா நாட் கருத்தரங்கு

காலம்: 25-02-1994 வெள்ளி
மாலை 3-00 மணி

இடம்: கல்லூரி குமாரசாமி மண்டபம்

கருத்துரை 1: "புவிநடுக்க அனர்த்தங்கள்"
எஸ். கி. பி. இராஜேஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை.

கருத்துரை 2: "குறள்வழிச்சிந்தனைகள்"
கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை.

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: எமது சங்கத்தால் நடாத்தப்பட்டு வந்த மேற்படி கருத்தரங்குத் தொடர் எதிர்வரும் முழுநிலா நாட்களில் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர்,
யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்.

அன்பளிப்பு:
புங்குடுதீவு/நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்
(சி-8699)



1-ம் ஆண்டு நினைவுகள்



அமரர்
திரு. அருணாசலம் சபாபதிப்பிள்ளை
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

ஐம்பத்து எட்டு கலவரத்தில் அரக்கரிடம்அடியுதைபட்டு குற்றுயிராய்க் கிடந்த போதும் இரு தடவை பாரிய அறுவைச் சிகிச்சையின்போதும் அணையாதஎம்சுடரே சற்றும் எதிர்பாரா வேளையிலே சொல்லாமல் கொள்ளாமல் ஓடித்தான் போனதேனோ.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

(7606)

# கோடைகால போருக்கு இராணுவம் தயாராகிறது; மாரிகால சமாதான முயற்சிகள் மறைகின்றன!

சமாதானத்தின் குரல்கள் படிப்படியாக அடங்கிப் போகக் கோடைகால யுத்தத்திற்கான அறிவிப்புக்கள் படிப்படியாக உரத்து ஒலிக்கத் தொடங்குகின்றன. கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் (மார்ச்) 01 பின்னர் வடக்கில் பாரிய தாக்குதல்கள் நடத்த இராணுவம் தயாராகி வருவதாக சிறிலங்கா அரசின் பல தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வெளிவரும் தகவல்களும் வலுவாகவே உள்ளன. இதில் சிறிலங்கா ஆயுதப்படையினருக்குத் தேவையான பெருந்தொகை ஆயுதக் கொள்வனவில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இக்கொள்வனவு 1000கோடி ரூபாவிற்கு மேல் செல்லும் என இராணுவ வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது. இதில் முப்படைகளுக்கும் தேவையான தளபாடங்களும் அடங்குகின்றன.

இதில் ஒரு தொகுதி 500 கோடி ரூபா ஏற்கனவே சீனாவில் இருந்து பெறப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலானவை வெடிப் பொருள்-குண்டுகள், ரவைகள், பீரங்கி ஷெல்கள் - என அறிய முடிகின்றது. சில கனரக வாகனங்களும் இதில் அடங்கியுள்ளன. இதேவேளை ஏனைய இராணுவத் தளபாடங்கள் கொள்வனவிற்கென ரஷ்யா தென் ஆபிரிக்கா, இஸ்ரேல், ஆஜென்ரீனா பக்கம் சிறிலங்காவின் கவனம் திரும்பியுள்ளது.

ரஷ்யாவின் தயாரிப்பான எம், ஐ, 8 உலங்கு வானூர்திகள் சிறிலங்கா விமானப் படையின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. ஏற்கனவே சிறிலங்கா விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள இவ்வுலங்கு வானூர்தி கொள்வனவிற்கென உயர் அதிகாரிகள் குழு ஒன்று தற்பொழுது ரஷ்யாவில் உள்ளது. அத்தோடு ஆஜென்ரீனாவில் இருந்து மேலும் புக்காரா விமானங்கள் கொள்வனவு செய்ய முயற்சிக்கப் பட்டும் வருகின்றது

கடற்படையைப் பொறுத்து அதன் கவனம் பெரும்பாலும் இஸ்ரேல், பிரான்ஸ், வடகொரியா என்பனவற்றின் பக்கமே உள்ளன. இறுதியாக புதிய அதிவேகத் தாக்குதல் படகுகளை இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கடற்புலிகளின் சவால்கள் கரையோரக் கடற்பரப்பில் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து அதிவேக தாக்குதல் படகுகளை சிறிலங்கா கடற்படை பெற்றுக் கொள்வதில் தீவிர கவனம் செலுத்துவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சிறிலங்காவின் இராணுவக் கட்டமைப்பும் கடந்த மாரி காலப் பெரும் தோல்வியின் பின்னர் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா நிர்ப்பந்தத்தின் பேரில் பதவி விலகிச் செல்ல புதிய தளபதியாக லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பதவி ஏற்றுள்ளார். விமானப்படைத் தளபதியான ரொறன் குணவர்த்தனா கால நீடிப்பு கோராமலே ஓய்வு பெற்றுச் செல்ல, புதிய தளபதியாக வைஸ் ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா விமானப்படையின் தளபதியாகப் பதவி ஏற்றுள்ளார்.

இவ் அதிகார பீடமாற்றமானது தனியாக உயர் நிலையில் மட்டுமல்ல, இரண்டாம், மூன்றாம் நிலைகள் வரையும் இடம்பெற்றுள்ளது. இதன் நிமித்தம் பதவி உயர்வுகள், புதிய பதவிகள், புதிய அதிகாரங்கள் என இராணுவக் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு, யுத்தத்திற்கு ஏற்றதாக தயார் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதேசமயம், வடபகுதியில் குறுகிய கால, நீண்டகால யுத்தத்திற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுவிட்டதாகவும், கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்ததும், அங்கு கடமையில் உள்ள 10,000 துருப்புக்கள் வடக்கே அனுப்பப்படுவார்கள் என்றும், அவர்கள் இங்குள்ள 35,000 துருப்புக்களுடன் சேர்ந்து தாக்குதலில் ஈடுபடவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது.

சுருக்கமாகக் கூறுவதானால் 1994 ஆம் ஆண்டு கோடைகாலச் சமருக்கு இராணுவம் தயாராகிவிட்டதென்றே கூறலாம். இந்நிலையில், கடந்த மாரிகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட பேசப்பட்ட சமாதான முயற்சிகள் படிப்படியாகப் பின்னடையத் தொடங்கியுள்ளன.

ஆனால், சிறிலங்காவின் அரசியல் அணுகு முறையில் கோடையில் போரும், மாரியில் சமாதானப் பேச்சும், என்பது புதியதல்ல. கடந்தகால வரலாற்றில் பொதுவான தொன்றாகவே அவதானிக்க முடிகின்றது. 1990 ஆம் ஆண்டின் கோடைகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் ஈழப் போரில் இதனைத் தெளிவாகவே காணக் கூடியதாகவே உள்ளது. இதில், டி.பி. விஜேதுங்கா புதியதொரு போக்கைக் காட்டவில்லை. ஆனால் விரைவான போக்கையும், வேகத்தையுமே காட்ட முற்படுகின்றார்.

1990ஆம்ஆண்டுஆரம்பித்த போரானது 1991ஆம் ஆண்டு கோடை முழுவதும் உக்கிரமாகவே இடம்பெற்றது. 1991 கோடை சமரின் பின்னர் இராணுவத்திற்கு போரில் பெரும் ஆயுதக் கொள்வனவின் தேவை உணரப்பட்டது. அதாவது 1991 கோடையில் இடம் பெற்ற ஒப்பரேசன் பலவேகய 1இன் பின்னர் சிறிலங்கா ஆயுதப் படை நவீனப் படுத்தப்பட வேண்டும் என்ற நிலை பொதுவாகவே இராணுவத் தரப்பினால் வற்புறுத்தப் பட்டது. அத்தோடு இராணுவத்தினருக்கு ஓய்வும் தேவைப்பட்டது.

இந்நிலையில் 1991 மாரி ஆரம்பித்த போது அமைச்சர் தொண்டமானினால் முன் வைக்கப்பட்ட சமாதானத் தீர்வுத் திட்டம் குறித்து அரச தரப்பில் ஒரு பகுதியினர் அக்கறை காட்டுவது போல் காட்டிக் கொண்டனர். அப்போதைய ஜனாதிபதியான ஆர். பிரேமதாசா அமைச்சர் தொண்டமானின் திட்டம் குறித்து பெரும்பாலும் மௌனம் சாதித்தமையினை அரசாங்கமும் தொண்டாவின் முயற்சிக்கு பின்னணியில் இருப்பதாகச் சந்தேகிக்க வைத்தது.

ஆனால் மாரி முடிந்த போது அமைச்சர் தொண்டமானின் திட்டத்தை அரசாங்கம் வெளிப்படையாகவே விமர்சித்ததோடு அதனை நிராகரிக்கவும் செய்தது. ஆனால் இக்காலப் பகுதியில் இராணுவம் தனது நிலையை வெகுவாகவே பலப்படுத்தியிருந்தது.

சீனாவில் இருந்து சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செக்கோசெலவாக்கியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட டாங்கிகளைக் கொண்ட படைப் பிரிவு உருவாக்கப்பட்டிருந்தது. அதேவேளை கடற்படைக்கெனப் பீரங்கிப் படகுகளும், கரையோர ரோந்து நடவடிக்கைக்கென நீருந்து விசைப் படகுகளும் - மோட்டர் ஜெட்-கொள்வனவு செய்யப்பட்டன.

இவ்வாறாக 1991 ஆம் ஆண்டு மாரி முடிந்த போது சிறிலங்கா புதிய ரக நவீன ஆயுத தளபாடங்களுடன் போருக்கு தயாராக இருந்தது. வடபகுதிப் போர் முனையை விரிவுபடுத்த வட பிராந்திய தளபதியான

**ஜெயராஜ்**

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ புதிய திட்டங்களை வகுத்திருந்தார்.

இவரின் முக்கிய குறியாக மணலாற்றுப் பிரதேசம் இருந்தது. 1991 கோடையின் இறுதியில் ஒப்பரேசன் மின்னல் எனப் பெயரிட்டு செப்டம்பரில் மணலாற்றில் மேற்கொண்ட பெரும்படை எடுப்பில் ஏற்பட்ட பின்னடைவை நிவர்த்திக்கும் வகையில் அவரது முதல் திட்டம் இருந்தது இரண்டாவது திட்டம் அவ்வருட கோடைக்குள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விடுவதெனவும் விரிவான திட்டம் இருந்தது.

இதன் முதற்கட்டமாக 1992 கோடை ஆரம்பத்தில் மார்ச் மாதத்தில் மணலாற்றுப் பிரதேசத்தில் ஒப்பரேசன் கிக்சர் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் புலிகளின் எதிர்பாராத அதிரடியால் இராணுவம் தனது வாசலிலேயே பெரிய இழப்பைச் சந்தித்தது,

கோடையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட இத் தோல்வியை தொடர்ந்து உடனடியாகவே இராணுவக் கட்டமைப்பு மாற்றப்பட்டது. கூட்டுப் படைத் தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டனிடம் இருந்த அதிகாரங்கள் முப்படைத் தளபதிகளின் கைக்கு மாறியது. அதாவது 1992 கோடை யுத்தம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா உட்பட்ட முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இக் கோடையிலேயே யாழ். குடாநாட்டை இறுதிக்கட்ட முற்றுகைக்கு இலக்காக இராணுவம் எண்ணியது. ஒப்பரேசன்பலவேகய II மூலம் வெற்றிலைக்கேணி ஆனையிறவு இராணுவ வேலி அமைக்கப்பட்டது

ஆனால், 1991 மாரியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிமுகப் படுத்திய போர் யுக்தியானது 1992 ஆம் ஆண்டின் இறுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும் தோல்வியையும் சலிப்பையும் ஊட்டுவதாக இருந்தது. 1991 கிறிஸ்மஸிற்கு முந்திய நள்ளிரவு மணலாற்றில் கொக்குத்தொடுவாயில் புலிகள் தொடங்கிய வெற்றிகரமான அதிரடித்தாக்குதல் 1992-ம் ஆண்டு அதே கிறிஸ்மஸிற்கு முந்திய இரவு கொக்குத்தொடுவாயில் நடந்த தாக்குதல்வரை நீடித்தது

இதேவேளை இக்காலப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் தனது தளபதிகள் பலரையும் இழந்திருந்தது. 1992 ஒகஸ்டில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் சிறிலங்கா இராணுவம் தனது வடபிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகளை இழந்திருந்தது. கட்டைக்காட்டில் பெரும் தொகுதி ஆயுதத்தையும் பறி கொடுத்திருந்தது.

இந்நிலையில் 1992 கோடையின் இறுதியில் இராணுவம் பெரும் நெருக்கடியில் சிக்கியிருந்தது. பல்லாயிரக்கணக்கானோர் இராணுவத்தைவிட்டு ஓடியிருந்தனர். தளபதிகள் கொல்லப்பட்டிருந்தனர். இந்நிலையில் இராணுவம் கட்டமைப்பு மாற்றி அமைக்கப் பட வேண்டிய நிலையும், தப்பி ஓடிய இராணுவத்தினரை மீண்டும் சேர்க்கவும் புதியவர்களை மேலும் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

அதாவது 1991 மாரி போலவே 1992 மாரியும் இராணுவத்திற்கு சீரமைப்பிற்கென பெரும் கால அவகாசம் தேவையாக இருந்தது. அரசாங்கத்தரப்பு இம்மாரி காலத்தைப் பயன்படுத்த எண்ணியது. இதனால் யுத்தத்தில் தளர்ச்சி ஏற்பட்ட போது சமாதான பேச்சுவார்த்தைகள் பற்றி குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. இவற்றில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத்பெர்னாண்டோவின் முயற்சி முக்கியமாகப் பேசப்பட்டது. அரசாங்கமும் இவ்விடயத்தில் கடந்த வருடம் போலவே மௌனமான போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது.

ஆனால் இக்காலகட்டத்தில் இராணுவக்கட்டமைப்பில் பெருமாற்றம் கொண்டு வரப்பட்டது. முப்படைத்தளபதிகளிடம் இருந்த அதிகாரங்கள் மீண்டும் கூட்டுப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. பெரும் ஆட்சேர்ப்பு முயற்சிகள் இடம்பெற்றதோடு, நவீன ஆயுதங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. இக்காலப் பகுதியிலேயே 'புக்காரா' விமானங்கள் வந்து சேர்ந்தன.

அதாவது 1993 ஆம் ஆண்டு கோடையில் புதிய சமர்களுக்கு என பெரியளவில் இராணுவம் தயார்படுத்தப்பட்டது. ஆனால் 1992 மாரிவரை புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் பாதிப்புக்களில் இருந்து இராணுவத்தினரால் விடுபடமுடியவில்லை எனவே 1992 கோடையும் இராணுவம் தன்னை சீரமைத்துக் கொள்வதிலும் பெருமளவு ஆயுதக்கொள்வனவில் ஈடுபடுவதிலுமே பெரும் கவனம் செலுத்தியது.

1993 கோடையில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் தொகையும் குறைவாகஇருப்பினும் யூலை மாதத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இதயபூமி 1 இராணுவ நடவடிக்கையான மண்கிண்டி மலை இராணுவமுகாம்மீதானதாக்குதல் காரணமாக இராணுவக் கட்டமைப்பில் மீண்டும் ஒரு மாற்றம் செய்ய புதிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா முற்பட்டார். அவர் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை முப்படைத்தளபதிகளுக்கும் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து 1993 கோடை இறுதியில் சிறிலங்கா இராணுவம் 'ஒப்பரேசன் யாழ்தேவி' என்னும் நடவடிக்கையை பெரிய எடுப்பில்தொடங்கியது. ஆயினும் அது படுதோல்வியடைந்தது. இத் தோல்வியானது சிறிலங்கா இராணுவத்தின் போரிடும் ஆற்றல் பற்றிக் கேள்வி எழுப்பிய அதேவேளை மாரிகாலத்தில் புலிகள் மேற் கொண்ட 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையானது சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பையேமுற்றாகக் குழப்பியது. சிறிலங்கா இராணுவத்தால் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போரிட முடியுமா என்ற கேள்வியையும் எழுப்பியது. அத்தோடு கடற்புலிகளின் வளர்ச்சியானது கடற்பரப்பில் புதியதொரு போர் முறையையும் திறந்திருந்தது.

இந்நிலையில் 1993 மாரியில் இராணுவக்கட்டமைப்பு முழுமையாகச் சீரமைக்கப் படவேண்டி இருந்ததோடு பெருமளவில் ஆயுத தளபாடக் கொள்வனவும் போருக்கான புதிய யுத்திகளும் தேவையாக இருந்தது. சுருக்கமாகக்கூறின் 1993 மாரி காலத்தில் இராணுவம்போரிடும் ஆற்றலை முற்றாகவே இழந்திருந்தது.

இதன்காரணமாகவே அரசதரப்பு சமாதானம் பேச்சுவார்த்தை என்பவற்றிற்கான சமிக்கைகள் சிலவற்றை இக்காலத்தில் வெளியிட்டது. சமாதான நல்லெண்ணமுயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது போல காட்டிக்கொண்டது. இந்தவரிசையில் ஒன்றிற்கு மேற்பட்ட நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வடக்கே சென்றுவர அனுமதிக்கப்பட்டன. இதில் கிறிஸ்தவ மதப்பிரிவினர் முக்கிய பங்காற்றினர். இதன்பிரகாரம் கத்தோலிக்க அதிமேற்றிராணியார் மெதடிஸ்த திருச்சபையின் ஆயர், அங்கிலிக்கன் ஆயர் ஆகியவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்தனர் அத்தோடு சர்வோதய தலைவர் ஆரியரெட்ணா வேறு நோக்கங்களுக்காக யாழ்ப்பாணம் வந்து சென்றார் இருப்பினும் அவரும் அரசியலில் அக்கறை காண்பித்தார் இதில் சிலவற்றிற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் தொடர்பு இருந்தது சிலவற்றிற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவின் தொடர்பு இருந்தது.

இதேவேளை 1993 இல் வடக்கில் அரசு திட்டமிட்ட இராணுவவெற்றிகள் பகற் கனவாகிப்போன நிலையில் அரசாங்கம் கிழக்கில் தேர்தல் ஒன்றை நடத்தி அதன் மூலம் நிலைமையைச் சரிசெய்ய முற்பட்டது, ஜனநாயக மரபுகளை எல்லாம் ஒரு புறம் மூட்டை கட்டி வைத்து விட்டு கிழக்கில் ஒரு தேர்தலை நடத்துவதற்கு முனைந்தது. இதற்குப் பெருமளவு துருப்புக்கள் தேவையாக இருந்ததன் காரணமாகவும் சமாதானத்தில் விருப்புள்ளதுபோல் காட்ட முற்பட்டு நின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஏற்கனவே கூறப்பட்டது போல் 1993 மாரிப் பருவத்தை தனது இராணுவத் தயாரிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தியது. இத் தயாரிப்பு வேலைகள் தற்பொழுது கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. இது 1994 ஏப்ரல் அளவிலேயே

(10ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வெகுஜன அமைப்புகள் கையளிக்கும்

## மறியல் போராட்டத்திற்கு காலக்கெடு

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மூன்று கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை எதிர்வரும் 28ஆம் திகதி யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கவுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டம் நேற்று மாலை மூன்று மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு: சிறில் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் குடாநாடு மீதான பொருளாதாரத் தடையை நீக்கி அத்தியாவசிய பொருள்களை அனுப்புதல் வேண்டும், கப்பலில் எடுத்துவரும் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை நிரந்தரமாக நீக்குதல் வேண்டும், குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களை விட்டு வெளியேறி அப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியேற வழி சமைக்க வேண்டும். ஆகிய மூன்று கோரிக்கைகளை உள்ளடக்கியே இம் மகஜர் எதிர்வரும் 28ஆம் திகதி அரச அதிபர் திரு: கா. மாணிக்கவாசகரிடம் கையளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இக்கோரிக்கைகளை நிறைவேற்ற கால அவகாசம் வழங்குவதெனவும் அதற்குள் இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதபட்சத்தில் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டமும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடாத்துவதென வும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை கப்பலுக்கான கட்டணத்தை தற்காலிகமாக நீக்குவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அறிவித்ததைத் தொடர்ந்து மேற்படி ஒன்றியம் எதிர்வரும் முதலாம் திகதி நடாத்த இருந்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மா, பாணின் விலை இன்று முதல் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

பாணின் விலை இன்று முதல் பழைய விலையான எட்டு ரூபாவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

இவ் விலை குறைப்புபற்றி தெரிவித்த செயலக வட்டாரங்கள் கப்பல் கட்டணத்தை அரச அதிபரே செலுத்த வேண்டும் என்ற அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் அறிவித்தலை அடுத்து சென்றதல கப்பலில் வந்த மாவுக்கு கப்பல் கட்டணத்தையும் சேர்த்து பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டதாலேயே பாண் சிலநாட்களாக 9 ரூபாவாக விற்கப்பட்டதாகவும் அரச அதிபர் கப்பல்கட்டணத்தை தற்காலிகமாக செலுத்தத்தேவையில்லையென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நேற்று முன்தினம் அரச அதிபருக்கு அறிவித்ததை தொடர்ந்து மீண்டும் பழைய விலையான 8 ரூபா விற்கேபாண் விற்கப்படுமென அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் பழைய விலைக்கே மாவை விற்பனை செய்ய வேண்டுமெனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# 'நளா' கல்விவளர்ச்சி கழகம் நாளை பொதுக்கூட்டம்

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகக் கோட்ட மகளிர் பிரிவினால் நிர்வகிக்கப்பட்டு வரும் ''நளா'' கல்வி வளர்ச்சிக் கழகம் வலிசெயலால் இடம்பெயர்ந்து பாதிப்புற்ற மாணவரின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களது பெற்றோர்/பாதுகாவலரின் ஒருமுகச் சந்திப்புக்கான பொதுக் கூட்டம் ஒன்றை, நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்/ புனித மரியாள் வித்தியாலயம் (ஓ. எல். ஆர்) பிரதான மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இக் கூட்டத்திற்கு கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இரவு, பகல் வகுப்புக்களில் பயிலும் மாணவர்களது பெற்றோர்கள்/பாதுகாவலர்கள், மற்றும் இடம் பெயர்ந்து நகர்ப்புற, வித்தியாலயச் சூழலில் வாழ்கின்ற மாணவர்களது பெற்றோர்கள் பாதுகாவலர்கள் நலன் விரும்பிகள், ஆசிரியப் பெருந்தகைகள், கிராம சேவையாளர்கள் அனைவரையும் தவறாது சமூகந்தந்து, தங்களது ஒத்துழைப்பையும், நல்லாலோசனைகளையும் தரும்படி தீவகக்கோட்ட மகளிர்பிரிவுப் பொறுப்பாளரும், கல்வி வளர்ச்சிக் கழகப் பொறுப்பாளரும் இணைந்து கேட்டுக் கொள்கின்றனர்.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

# வெளிவாரிப் பரீட்சைகளை யாழ். இல் நடத்த மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது என பேராதனை பல்கலைக் கழக வெளிவாரிப் பகுதியினர் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பரீட்சையை நடத்துவதானால் தமது பல்கலைக் கழகத்தை சேர்ந்த மேற்பார்வையாளர் சிலர் இருக்க வேண்டும் என்றும், தற்பொழுது நிலவும் அசாதாரணசூழ்நிலை காரணமாக அங்கு இவர்கள் செல்ல அஞ்சுகின்றனர். இதனால் மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாது இருப்பதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (நி)

# நினைவஞ்சலி நிகழ்வு

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை முன்னாள் அதிபர் அமரர் பொ. இராநடராஜன் அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்**

**24-2-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 972

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-8959, 24-5177, 24-5942, 42-6511, 41-6686, 27-2020, 40-9188, 22-7271, 24-4636, 26-502, 24-5818, 24-5323, 24-7375, 27-4628, 24-5121, 27-5633, 26-3667, 24-9549.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4108, 28-9249, 26-6527, 24-9490, 28-1677, 43-0916, 28-9449, 24-5679, 24-9773, 26-6872, 27-6024, 26-4376, 40-4429, 28-8367, 26-3170, 28-3233, 42-9220, 28-5039, 27-9033.


யாழ் **ஸ்ரீதர்** திரையில்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**சிவந்த மண்**

(கலர்)

தினசரி 3.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு 10.30 மணி, 3.00 மணி, 6.00 மணி

(7608)



**பாணின் விலை மீண்டும் ரூபா 8/-**

யாழ். செயலகத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட பணம இன்றிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பாணின் விலை ரூபா 1/- 25-2-94 முதல் குறைத்து ரூபா 8/- வாக விற்கப்படுமென்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

(கி-8706)


**இழக்கில்**

வன உயர் அதிகாரி பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

**சமாதானத்தை**

தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் தெரிவு செய்யப்பட்டனர் எனவும் அத்துடன் இவர்களது விடுதலையானது கத்தோலிக்க கிறிஸ்தவஆயர்கள் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு ஒரு திறவுகோலாகவும் அமையும் என்ற நோக்குடனேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் எனவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கைதிகள் இருவரையும் பொறுப்பேற்ற கத்தோலிக்க துறவிகள் சங்கத் தலைவர் அலெக்ஸ் சாண்டர் அவர்கள் அவர்களை நேற்றே கொழும்பிற்கு கூட்டிச் சென்றார். (கி, நி)


**THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY**

Graduates/ Postgraduates are requested to apply for the above fellowship giving their bio - data and research proposal in Biotechnology. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs-2,500/- shallbe paid.

The duration for this fellowship shall be one year and could be extended by re-applying for the fellowship- The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory- Closing date will be 1994- 04- 01

REGISTRAR
University of Jaffna.
1994 - 02 - 23

(சி-8704)


**உயர்தர**

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை மீளவும் க. பொ. த, உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அறனே பாடசாலைகளுக்கு சமுகம் தருவதில்லை எனவும் தெரியவருகிறது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

மேற்படி விடயம் தொடர்பாகக் கல்லூரி அதிபர் ஒருவரிடம் கேட்டபோது, பாடசாலைகளில் தளபாட மற்றும் வகுப்பறை வசதிகள் பற்றாக்குறை நிலவுவதால் இரண்டாம் முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவரின் வரவு குறைந்து காணப்படுவதாகத் தெரிவித்தார்.

**கோடை**

முற்றுப் பெறும் என்றே அரசியல் இராணுவ வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. ஆனால் தயாரிப்பு வேலைகள் முடிவடைய முன்னரே தாக்குதல் திட்டங்கள் ஆரம்பிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் உண்டு. இத் தாக்குதல் திட்டங்கள் உச்சகட்டத்தை அடையும்வேளை இராணுவத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அதாவது 1994ஆம் ஆண்டு கோடைகாலப்போருக்குஅரசு தன்னைத் தயார் படுத்திக் கொண்டுள்ளது. இதன் ஆரம்பக் கட்டம் மட்டுப்படுத்தப்பட்ட குறுகியகால நடவடிக்கைகளாகவே அமையலாம்; என்றே கருதப்படுகின்றது. கோடையின்மத்தியில் பெரும் தாக்குதல்களை நடத்தலாம் எனவும் உணரப்படுகின்றது. கடந்த கால அனுபவங்களும் கோடைகால மத்தியே சிறிலங்கா பெரும் தாக்குதல்களுக்கு தேர்ந்தெடுத்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டக் கூடியவையாகும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் கோடைகால யுத்தமும். மாரிகால சமாதான முயற்சிகளும் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வை தந்துவிடப் போவதில்லை. அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழிப்பதை தவிர இனப்பிரச்சினை தீர்விற்கு இராணுவ நடவடிக்கையால் எதையும் அரசால் சாதித்து விட முடியாது. ஆனால் இவ் இராணுவ நடவடிக்கைகளால் நிரந்தரமாக சமாதான பேச்சுக்களை தொலைத்து விட அரசால் முடியும்.

**புலிகளின்**

உண்ணாவிரதம் இருந்த போது எமக்கு அருகில் இருந்து ஒருநாள் காலம்வரை எமக்கு பணிவிடை செய்ய எமது பெற்றோருக்கு அனுமதி வழங்கினர்: உலகிலேயே முதல் தடவையாக இங்குதான் இவ்வாறான நிகழ்வு இடம்பெற்றிருக்கும் என கருதுகிறேன். விடுதலைப் புலிகளின் இத்தகைய செயற்பாடு உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும்என்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.

எமது விடுதலைக்கென புலிகள் பல சந்தர்ப்பங்களை சிறிலங்கா அரசாங்கத்திற்கு கொடுத்தபோதும் விடுதலை எம்மை அண்மித்தபோதும் கூட அரசின் உதாசீனத்தால் எமது விடுதலை கைநழுவிப் போனது.

எமக்கு விடுதலை ஒருபோதும் அரசினால் கிடைக்கப்போவதில்லை. மாறாக விடுதலைப் புலிகளின் மனிதாபிமானத்தினாலேயே தான் கிடைக்கும் என்பதை அப்பொழுதே உறுதியாகத் தெரிந்துகொண்டோம். எமது சக சகோதரர்களது விடுதலை தொடர்பாக நாம் பௌத்த பிக்குகளின் உதவியுடனேயே மேற்கொள்ளவுள்ளோம். அரசின் சக்திகளாக விளங்கும் மல்வத்த, அஸ்கிரிய, மகாநாயக்க பீடங்களுடன் இணைந்து இவர்களது விடுதலைக்கு உதவுமாறும் சமாதான பேச்சுவார்த்தைக்கு அரசை வற்புறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கவுள்ளோம் என்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.